6373.

## பிளாட்டினம் விழா மலர் - 2022

## 1952 - 2022

# காகித அன்னை



காகித ஆலை

வாழைச்சேனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6373.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பளிப்பு
கந்தையா சதாசிவம், சமாதான நீதவான்
B.M.S. (HONS), M.C.I.M (ENG)
தேசிய கடதாசி ஆலைக் கூட்டுத்தாபன
முன்னாள் சிரேஸ்ட உதவி ஆலை முகாமையாளர்
இல : 9, தாமரைக்கேணி வீதி, மட்டக்களப்பு.
தொ.இல : 065 2222049 / 071 8379313

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழைச்சேனை காகித ஆலை

# பிளாட்டினம் விழா மலர்
# 2022

# காகித அன்னை

**தொகுப்பு :**


தேசகீர்த்தி கந்தையா சதாசிவம் (J.P)
முன்னாள் உதவி ஆலை முகாமையாளர்
"விமலவாசா", இல.9 தாமரைக்கேணி வீதி, மட்டக்களப்பு.

T.P : 065 222 2049
Mobile : 071 837 9313


**அனுசரணை :**

திரு.பிறின்ஸ் ஜெயராஜா
கனடா

**இணை அனுசரணை :**

வாழைச்சேனை கடதாசி ஆலை
முன்னாள் ஊழியர்களின் நலன்புரிச்சங்கம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்

01. கடவுள் வாழ்த்து...
02. தமிழ்மொழி வாழ்த்து...
03. காகித அன்னைக்கு வாழ்த்து...
04. வாழ்வு தந்த தாயே வாழியவே...
05. சமர்ப்பணம்...
06. தெய்வத்திரு நல்லையா அவர்களின் நிழல் பிரதி
07. பேரருட் தந்தை. யோசப் பொன்னையா - ஆசிச்செய்தி
08. சுவாமி தக்ஷஜானந்தர் - ஆசிச்செய்தி
09. ஹா.மு.நியாஸ் அஹ்மத் மௌலவி - ஆசிச்செய்தி
10. திரு.K.கருணாகரன் முன்னாள் (அரச அதிபர்) - வாழ்த்துச்செய்தி
11. திருமதி. சுபா சக்கரவர்த்தி (முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளர்) - வாழ்த்துச்செய்தி
12. திருமதி. எஸ். குலேந்திரகுமார் (வலயக்கல்விப் பணிப்பாளர்) - வாழ்த்துச்செய்தி
13. திரு.இ.கிருஷ்ணமூர்த்தி (முன்னாள் ஆலை முகாமையாளர்) - வாழ்த்துச்செய்தி
14. திரு.எஸ்.தணிகாசலம் (செயலாளர்) - வாழ்த்துச்செய்தி
15. அமைச்சர் திரு.நல்லையா அவர்களைப் பற்றி ஒரு சில வார்த்தைகள்
16. இதழ் ஆசிரியரைப் பற்றி
17. இதழ் ஆசிரியரின் இதயத்திலிருந்து - அவரது நிழல் பிரதி
18. 1940ம் ஆண்டுகளில் கிழக்கு மாகாணம் இருந்த நிலை
19. கிழக்கு மாகாணத்தின் நிழல் பிரதிகள்
20. வல்லிபுரம் நல்லையா அவர்கள் ஆற்றிய சேவைகள்...
21. காகித ஆலையின் தோற்றமும் வளர்ச்சியும்
- ஆலை நிறுவுவதற்கான காரணிகள்
- கடதாசி ஆலையின் அமைவிடம்
- வாழைச்சேனை ஆலையின் தொழில்நுட்ப விபரங்கள்
- உற்பத்தி செய்யப்பட்ட கடதாசி வகைகள்
- கடதாசி உற்பத்திக்கான மூலப்பொருள்கள்
- இலுக்குப்புல் பண்ணையின் அமைவிடம்
- மூலப்பொருளில் மாற்றம்
- 1972ம் ஆண்டு பொருத்தப்பட்ட அட்டை ஆலையின் தொழில்நுட்ப விபரங்கள்
- 1956ம் ஆண்டிலிருந்து 1995ம் ஆண்டு வரையான காலப்பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள்
- 1974ம் - 1998ம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஆலை ஈட்டிய இலாபம்
- தொழிற்சங்கங்களும், அங்கத்தவர்களும்
- கடதாசி ஆலையின் சரித்திரக் குறிப்புகள்
- கடதாசி ஆலை சாதித்த சாதனைகள்
- கடதாசி ஆலை சந்தித்த சவால்கள்
- தொழிலாளர்கட்கு வழங்கப்பட்ட வசதி, வாய்ப்புக்கள்
- ஆலை ஊருக்கும், உலகத்திற்கும் வழங்கிய சேவைகள்.

22. கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனத்திற்கு தலைமைத்துவம் வழங்கிய தலைவர்கள்
23. பொது முகாமையாளர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. உயர் பதவி வகித்தவர்கள்

25. வாழைச்சேனை காகித ஆலைக்கு முண்டு கொடுத்த மும்மூர்த்திகள்

26. மட்டுநகர் மண்ணின் மைந்தன் மாணிக்கமும் அவரது முதல் மாணவனும்

1955 - 2016ம் ஆண்டு காலப்பகுதியில் சேவையில் இருந்தவர்கள் (திணைக்கள ரீதியாக)

- நிர்வாகம்
- உற்பத்தி திணைக்களம்
- பொறியியல் திணைக்களம்
- கணக்குப்பகுதி
- வினியோகமும் - போக்குவரத்தும் பகுதி
- தரக்கட்டுப்பாட்டு திணைக்களம்
- உள்ளக கணக்காய்வுப் பகுதி

27. 2016ம் ஆண்டில் சுயவிருப்பத்தின் பேரில் இளைப்பாறிய ஊழியர்கள்

28 2016ம் ஆண்டில் கட்டாய ஓய்வில் அனுப்பப்பட்டவர்கள்

29 தற்போது ஓய்வு நிலையில் உள்ள ஊழியர்கள்

30. வாழைச்சேனை கடதாசி ஆலை முன்னாள் ஊழியர்களின் நலன்புரிச்சங்க அங்கத்தவர்கள்

31. வெளிநாடுகளில் பயிற்சிபெற்ற வாழைச்சேனை ஆலை ஊழியர்கள்

32. சேவையில் இருக்கும் போதே இலங்கையில் உயர்கல்வி கற்று முன்னேறிய ஆலை ஊழியர்கள்

33. இறைபதம் அடைந்த வாழைச்சேனை காகிதஆலை ஊழியர்கள்

34. சேவையில் இருந்து இடைவிலகிய ஊழியர்கள்

35. முடிவுரை

36. இணைப்புக்கள்

- காகித அன்னையின் கண்ணீர்த்துளிகள்
- புற்றுநோய்களும் உணவும்
- இதயபூர்வமான நன்றிகள்
- வாசகர்களின் கவனத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# கடவுள் வாழ்த்து

## விநாயகர் துதி

**திருச்சிற்றம்பலம்**



பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.
(சம்பந்தர் தேவாரம்)

## சரஸ்வதி துதி



ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை – தூய
உருப் பளிங்கு போல்வாள் என் உள்ளத்தின் உள்ளே
இருப்பாள் இங்கு வாரா திடர்.

(கம்பர்)

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி.
வாழிய வாழிய வே!

வான மளந்த தனைத்து மளந்திடும்
வன்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினுந் தன் மணம் வீசி
இசை கொண்டு வாழியவே!

எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி.
என் றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!

தொல்லை வினை தரு தொல்லை அகன்று
சுடர்க தமிழ் நாடே

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ் மொழி.
வாழ்க தமிழ் மொழியே

வான மறிந்த தனைத்து மறிந்து
வளர்மொழி வாழியவே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காகித அன்னைக்கு வாழ்த்து

"ஆயுதம் செய்வோம் நல்ல
காகிதம் செய்வோம்
ஆலைகள் வைப்போம் கல்விச்
சாலைகள் வைப்போம்" என

பண்ணிசைத்துப் பாடல் அமைத்தான்
வெண் தலைப்பா முடிதனில் சூடிய
புரட்சிக் கவிஞன் புலமையின் சிகரம்
எட்டயபுரத்தின் ஏற்றம் தகு பாரதி

அன்னாரின் அறை கூவலை நிறைவு செய்திட
நல்லையா என்னும் நாடறிந்த செயல்வீரன்
அல்லும் பகலும் அயராது சிந்தித்து
வெல்லும் வேலைத்திட்டங்கள் பல தீட்டி

முன்னறி தெய்வம் ஐங்கரன் துணையுடன்
வாழைச்சேனை வளம் மிகு மண்ணில்
காடு வெட்டி வேரும் பிடுங்கி
காகித ஆலையை அமைத்தார் அம்மா.

தமிழர் சிங்களவர் இஸ்லாமியர் பேத மின்றி
மனித குலத்தை மகிமையுடன் வாழவைத்த
அன்னையே அருமைக் கற்பகத் தருவே
நீங்காத புகளுடன் நிர்மலனின் துணையுடன்

**கலாபூஷணம் சுப்பிரமணியம் சிவலிங்கம்**
**முன்னாள் வாழைச்சேனை காகித ஆலைப்**
**பொறியியலாளர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வு தந்த தாயே வாழியவே

காகித ஆலைக்கு அகவை எழுபது
காணலாம் நாமிங்கு மகிழ்ச்சிப் பெருக்கது...
காலங்கள் தோறும் ஒளி பெறும் நிலவிது
கடமையாம் எமக்கு தன் பெருமைகள் காப்பது.

மிருகங்கள் வாழ்ந்திட்ட வனமாகக் கண்டதை
மிடுக்கான பாராளு மன்றத்தின் உறுப்பினர்
அருமையாம் நல்லையா அவர்களின் முயற்சியால்
அமைத்தனர் அவ்விடம் காகித ஆலையை.

நாற்பத்து ஏழிலே வேலைகள் தொடக்கம்
ஐம்பத்து இரண்டிலே கைத்தொழில் அமைச்சராம்
நாமெலாம் தெரிந்த பொன்னம்பலம் அவர்களும்
நலம் பெறத் திறந்துமே உற்பத்தி ஆரம்பம்

ஒற்றுமை உணர்வுடன் ஒவரின மக்களும்
ஓயாது உழைத்தனர் ஒவ்வொரு தினத்திலும்
உற்பத்தி பெருகியே உயர்ந்திட ஆலையும்
ஊருக்குள் நகரமே வாழைச்சேனையும்.

இளைஞர்கள் யுவதிகள் வேலையில் இணைந்தனர்
இதனால் காதலும் மலர்ந்திட மணந்தனர்!.
இரவிலும் பகலிலும் ஆலைக்காய் உழைத்தனர்
இரட்டிப்பு வேதனம் நிறையவே பெற்றனர்.

உற்பத்தி பெருகவே ஒவ்வொரு வருடமும்
உடுத்திடச் சித்திரை வருடத்தில் உடைகளும்
உயரிய நோக்கோடு பயிற்சிக் கொப்பியும்
உளமார வழங்கியே உயர்ந்தது ஆலையும்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வைத்திய விடுப்புகள் எடுக்காத ஊழியர்
வரமாக அதிகமாய் வருமானம் கண்டனர்
வாழ்க்கையில் முக்கிய தேவைகள் தீர்ந்தனர்.
வளமான வீட்டுக்குக் கடன்களும் பெற்றனர்.

மேலதிக படிப்புப் படிப்போர்க்கு என்றும்
மென்மேலும் உயரக் கடமை விடுப்பும்
மேலு மோய்வு பெறுவோர் பிள்ளைகளுக்கும்
மெய்ச்சிட வேலைகள் மகிழ்ந்திடக் கிடைக்கும்

வசதிகள் தந்தநல் அன்னையும் நீயே
வாழ்க்கையின் பல்கலைக் கழகமும் நீயே
வந்திட்ட எழுபது அகவையில் உனையே
வாழ்த்துகிறோம் நாங்கள் மன நிறை வுடனே..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

கிழக்கு மாகாண மாணவர்களின் முன்னேற்றம் கருதி
வந்தாறுமூலையிலே விடுதியுடன் கூடிய மகாவித்தியாலயம்.
மட்டக்களப்பு கோட்டைமுனையிலே அரசினர் கல்லூரி மற்றும்
ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை ஆகிய கல்விக் கூடங்களை நிறுவி
மக்களின் சுகாதார நலன்கருதி மட்டக்களப்பு
ஆதார வைத்தியசாலையையும் ஸ்தாபித்து
மக்களின் பொருளாதார முன்னேற்றத்துக்காக
வாழைச்சேனையிலே காகிதஆலையையும் ஆரம்பித்து
கிழக்கு மாகாண மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தி
அவர்களுக்கு வழிகாட்டியாக இருந்து
இறைபதமடைந்த
கற்குடா முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்
தெய்வத்திரு வல்லிபுரம் நல்லையா
அவர்களது
ஞாபகார்த்தமாக இம்மலரை காணிக்கையாக
சமர்ப்பிக்கின்றோம்.

தேசகீர்த்தி கந்தையா சதாசிவம் (J.P)
முன்னாள் ஊழியர்கள் சார்பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6373.



அமரர்.வ.நல்லையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிச்செய்தி

**பேரருட் தந்தை யோசப் பொன்னையா**
மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர்,
மட்டக்களப்பு.
01-09-2022

*"In the fragrance of the gentleness of Christ"*

**RT. REV. DR. JOSEPH PONNIAH - BISHOP OF BATTICALOA**

**BATTICALOA DIOCESE**

மட்டக்களப்பு மாவட்டம் விவசாயத்திலும் மீன்பிடித்துறையிலும் வாழ்வாதாரத்தை நம்பி இருக்கின்ற மக்கள் வாழும் பெரும் பகுதியாக விளங்குகின்றது. விவசாயத்துறையை முன்னேற்ற அரசு பலவழிகளில் முயற்சி எடுத்தது. அதில் ஒன்று தான் வாழைச்சேனைப் பகுதியில் அமைக்கப்பட்ட காகித ஆலையாகும். வேளாண்மைப்பயிர் செய்பவர்கள் விழைந்த பயிரை அறுவடை செய்தபின் மீதி இருக்கின்ற வைக்கோலைப் பெருவாரியாகப் பயன்படுத்தி காகித உற்பத்தி செய்ய காதிதஆலை நிறுவப்பட்டது.

மேற்படி காகிதஆலை 1952ம்ஆண்டு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு வல்லிபுரம் நல்லையா அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது அதன் வழியாக பலருக்கு வேலைவாய்ப்பு அளித்து மக்களின் வறுமையைப் போக்கியது. இன்று வரை மென்மேலும் உயர்வுபெற்று மக்களுக்கு பொருளாதார ரீதியான நன்மைகளை செய்கின்றது. அதை இட்டு நாங்கள் பெருமைப்படுகிறோம்.

தொடர்ந்து ஆட்சியைப் பொறுப்பேற்கும் அரசாங்கங்கள் காகித ஆலையின் வளர்ச்சிக்காக தேவையான சீர்திருத்தங்களைச் செய்து எல்லா மக்களும் வளம் பெற உழைக்க வேண்டும் என நல்லாசி உரை கூறி விடை பெறுகின்றேன். வாழ்த்துக்களும் ஆசியும்.

+ P. Joseph

✠ பேரருட்தந்தை யோசப் பொன்னையா
மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர்
மட்டக்களப்பு

01.09.2022

Rt. Rev. Dr. Joseph Ponniah ★ Bishop of Batticaloa ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி

**மனிதகுல சேவையின்**
**சுவாமி தக்ஷஜானந்தர்**
பொது முகாமையாளர்

**Ramakrishna Mission Ashrama & Children Homes**
*Ramakrishnapuram, Batticaloa, Sri Lanka.*
0094-65-2222752 batticaloa@rkmm.org
*https://www.rkmceylon.org/about/batticaloa*

கிழக்கிலங்கையின் பிரபல்யம் பெற்ற தொழிற்சாலைகளில் ஒன்றாக விளங்கிய வாழைச்சேனை கடதாசி ஆலையானது 1952ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இவ்வருடம் 70 ஆண்டுகளைப் பூர்த்தி செய்கிறது என அறிகின்றோம். இந்நிகழ்வை முன்னிட்டு இக்கடதாசி ஆலையின் ஓய்வுநிலை ஊழியர்களால் வெளியிடப்படவுள்ள சிறப்பு மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்ச்சி.

இந் நூலானது இக்காகித ஆலையினை நிறுவுவதற்கு காரண கர்த்தாவாக விளங்கியவர்கள். இதன் வளர்ச்சிக்குக் காரணமானவர்கள் இக்காகித ஆலையிலே இறுதிவரை பணியாற்றி உயிர் நீத்தவர்கள் மற்றும் இங்கு பணியாற்றிய ஓய்வுநிலை ஊழியர்களின் விபரங்கள் என்பவற்றைத் தாங்கி வருகின்றது. இது தற்கால இளைஞர்களுக்கும் எதிர்கால சந்ததியினருக்கும் இவ்வாலையைப்பற்றி அறிந்து கொள்வதற்கான ஓர் ஆவண நூலாக அமையும் என்பதில் ஐயமில்லை. மீண்டும் இக்காகித ஆலையானது புதுப்பொலிவுடன் மக்கள் தொழிற்சாலையாக மாற வேண்டும், பலரும் பயனடைய வேண்டும் என்பதே நமது பிரார்த்தனையாகும். எவர் ஒருவர் தன்னலம் கருதாது மக்களுக்குச் சேவை புரிகின்றாரோ அவர் போற்றத்தக்கவர் எனக் கூறி வாழைச்சேனை கடதாசி ஆலையின் சிறப்பு மலர் வெளியீடு இனிதே நடைபெறவும் நூல் வெளியீட்டுடன் தொடர்பு பட்ட அனைவருக்கும் பகவான் ஶ்ரீராமகிருஸ்ணர், அன்னை ஶ்ரீசாரதாதேவியார், சுவாமி விவேகானந்தர் ஆகிய தெய்வத் திரு மூவரின் நல்லாசிகளையும் வேண்டிக்கொள்கிறோம்.

நன்றி.

(சுவாமி தக்ஷஜானந்தர்)
பொது முகாமையாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி

**ஹா.மு.நியாஸ் அஹ்மத் மௌலவி**
ஜாமி-உஸ்-ஸலாம் ஜும்ஆப் பள்ளி வாயல்
மட்டக்களப்பு.

**எல்லா புகழும் இறைவனுக்கே**

மட்டக்களப்பு ஜாமி–உஸ்–ஸலாம் (நகர் பள்ளி) ஜும்ஆப் பள்ளி வாயல் சார்பாக தங்களால் வெளியிடப்படும் மலருக்கு ஆசிச் செய்தி வழங்குமாறு கேட்டுக் கொண்டதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம்.

பல்லின மக்கள் வாழுகின்ற எமது நாட்டில் இளைஞர் யுவதிகள் வேலை வாய்ப்பை பெறவேண்டும் என்ற நன் நோக்கத்தில் 1952ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கடதாசி ஆலை படிப்படியாக முன்னேற்றம் அடைந்து 70 ஆண்டுகளை நிறைவு செய்வது மிகவும் பாராட்டத்தக்க விடயமாகும்.

இந்த சந்தர்ப்பத்தில் கடதாசி ஆலையின் தொழிலாளர்களின் விடா முயற்சியை பாராட்டுவதுடன் சதாசிவம் ஐயா அவர்களின் தலைமையில் செயற்படும் மலர்க் குழுவினால் வெளியிடப்படும் மலரிற்கு ஆசிச் செய்தியை வழங்குவதுடன் வாழைச்சேனை கடதாசி ஆலை மென்மேலும் முன்னேற இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச்செய்தி

**K.கருணாகரன்**
அரசாங்க அதிபரும் / மாவட்ட செயலாளரும்.
மட்டக்களப்பு மாவட்டம்.

மாவட்டசெயலகம்,மட்டக்களப்பு.
දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය මඩකලපුව
DISTRICT SECRETARIAT, BATTICALOA.

## Message from Government Agent, Batticaloa

This gives me immense pleasure to pen this message to the 70th Anniversary of the Valaichchenai Paper Mills which is the pioneer Paper Factory in the Island with a flourished past history.

If we look back at the times gone by, with the great efforts of Hon Vallipuram Nallaiah, then Member of State Council and Minister of Post and Information, the construction work of this Paper Mill was started in the year 1952. It commenced the commercial activity in the year of 1956 under the name "Valaichchenai Paper Mill" In 1958, the corporation was renamed as "Eastern Paper Mills Corporation" with its Board Machine commissioned in 1972. During this time this factory is considered as the biggest industry in Eastern province with more than 3000 employees working in it. In 1976 it became state-owned and then run as a state venture and was subsequently changed to the National Paper Corporation (NPC) The main raw material, straw, were collected from all over the province in various places like Sahamam, Akkaraipattu, Koduwamadu and Pollonnaruwa etc. This factory functioned as a well-managed entity with proper supply chain mechanisms, staff accommodation and welfare system and prospered as a profit making organization. During these period, 70% of the total paper demand of the country was met by the production of high quality papers from this Paper Mill. But with the unwanted turbulence prevailed in our country for more than three decade, the function of this Paper Factory had come to a standstill for some years. After 1990s this factory was converted into a waste paper recycling center whereas paper industry was depended highly on imports.

At present, with the economic crisi's and foreign exchange issues, where even some school exams had to be postponed due to the lack of papers, restoration of the production at Valaichchenai Paper Mills is deemed highly viable. It has been predicted by National Paper Company Ltd. (NPCL) Chairman KAW. Rupasinghe that, with the re-commencing this factory at full capacity the country can expect to have 100% of its paper and board requirements fulfilled.

This factory was once considered jewel of east, now should be considered as a national wealth. Everyone should join together irrespective of political, racial or communal difference and work for the commencement of its operation in full capacity. This will definitely pave way to open up many job opportunities to the people from this area and the outskirts as well. It will also improve the standards of life of our people.

**K.Karunaharan**
Govt.Agent/District Secretary
Batticaloa


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச்செய்தி

**திருமதி.சுபா சக்கரவர்த்தி**
முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளர்,
மட்டக்களப்பு.

ஒரு நாட்டின் பொருளாதாரம் அந்நாட்டிலுள்ள விவசாயத்துறை, கைத்தொழிற்துறை இரண்டிலும் தங்கியுள்ளது. தனித்து விவசாயத்துறையை மட்டும் நம்பி அந்நாடு வளர்ச்சி அடைந்துவிடமுடியாது. தொழில் நுட்பம் விருத்தியடைந்துள்ள இக் காலகட்டத்தில் கைத்தொழில் வளர்ச்சி ஒரு நாட்டிற்கு இன்றியமையாதது. கைத்தொழில் சிறுகைத்தொழிலாகவோ பாரிய கைத்தொழிலாகவோ ஏன் குடிசைக் கைத்தொழிலாகவோ அமையலாம். ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியைக் கட்டியெழுப்புவதில் கைத்தொழிலின் பங்கு மகத்தானது.

இலங்கையைப் பொறுத்தவரை விவசாயப் பொருட்களான தேயிலை, இறப்பர் தெங்குப் பொருட்கள், வாசனைத் திரவியங்கள் என்பனவற்றிலேயே கவனம் செலுத்தி வந்தது. இந்நிலையில் சுதந்திரம் கிடைத்து 4 வருடங்களில் கிழக்கே காகிதத் தொழிற்சாலையொன்று ஜேர்மன் நாட்டின் அரச உதவியுடன் உருவாக்கப்பட்டது. பாரிய தொழிற்சாலையான இத்தொழிற்சாலையில் பிரதான மூலப்பொருளாக " வைக்கோல்" பயன்படுத்தப்பட்டது. இலங்கையின் கிழக்குப் பிரதேசம் விவசாயத்தை முக்கிய தொழிலாகக் கொண்ட பிரதேசமாக இருப்பதால் வைக்கோலைப் பெறுவதும் இலகுவாக இருந்தது. இத் தொழிற்சாலை மட்டக்களப்பின் கிழக்கே "வாழைச்சேனை" எனும் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டு சிறப்பாக இயங்கிக்கொண்டிருந்தது.

இலங்கையின் கிழக்குப்பிரதேசத்தையே வளப்படுத்திய ஒரு தொழிற்சாலையாக அமைந்திருந்தது. 1952ம் ஆண்டில் நிறுவப்பட்டது. முதல் கிழக்குப் பிரதேசமக்களுக்கு வேலை வாய்ப்பிற்கும் பஞ்சமிருக்கவில்லை. விவசாயிகளுக்கு வைக்கோலும் பணமாக்கப்பட்டது. வைக் கோலைச் சேகரிப்பதற்கென பல சேகரிப்பு நிலையங்கள் உருவாக்கப்பட்டன. படிக்காதவர்கள் கூட தொழிலாளர்களாக சேர்க்கப்பட்டு மாதாந்தச் சம்பளம் பெறும் உழியர்களாக தொழில் புரிந்தனர். கிழக்குப் பிரதேசமே கலகலப்பாக இருந்தது. ஒரு தொழிற்சாலை இயங்கும் போது, தொழிலாளர்களுக்கு மட்டுமல்ல பல்வேறு துறைகளும் விருத்தியடைவது கண்கூடு. போக்கு வரத்துத்துறை விருத்தியாகும். சாப்பாட்டுக் கடைகள் தொழிற்சாலையை சுற்றி உருவாகும். . பல குடும்பத்தினர் உணவு வழங்குவதன் மூலமே தமது அன்றாட வாழ்க்கையை சிறப்புற வாழ வாய்ப்பேற்படும்.

1973ம் ஆண்டு எனது பல்கலைக்கழக வர்த்தகத்துறை சிறப்புக் கல்விக்கான ஆய்வுக்கட்டுரை ஒன்றைச் சமர்ப்பிப்பதற்காக 6 மாத காலம் தொழிலாளர்களுடன் இணைந்து தொழில்புரியும் வாய்ப்புக் கிடைத்தது. அந்த அனுபவம் மிகவும் இனிமையானது. அதிகாலையில் புகையிரதத்தில் (விசேட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகையிரத சேவை) எல்லோரும் இணைந்து ஒரு மணித்தியால பயணம் செய்து தொழிற்சாலை செல்லுவது மிக மகிழ்ச்சியானது. ஒவ்வொருவரும் நண்பர்களுடன் அளவளாவிக் கொண்டும், பாட்டுகள் பாடிக் கொண்டும் நேரம் போவது தெரியாமல் பயணத்தை முடித்து தொழிற்சாலை செல்வர். ஒரு குடும்பமாக வாழ்ந்த காலம். அது ஒவ்வொருவரின் இன்பதுன்பங்களிலும் பங்கு கொண்டு மகிழ்ந்த காலம்.

வாழைச்சேனைப் பிரதேசம், ஓட்டமாவடிப் பிரதேசம் என்பன பொருளாதாரத்தில் விருத்தியடைந்த காலம். ஏறக்குறைய 2000க்கு மேற்பட்ட குரும்பங்களின் அடுப்பு தொடர்ந்து எரிவதற்குக் காரணமாய் அமைந்திருந்தது. குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்கு ஆதரவாக இருந்தது. காரணம் குழந்தைகளின் கல்விக்காக தொழிற்சாலையில் அப்பியாசக் கொப்பிகளை வழங்கினார்கள். அதுமட்டு மல்ல வருடத்திற்கு இருதடவை "போனஸ்" வழங்கினர். இலாபத்தில் ஒரு பகுதி தொழிளார்களுக்குப் பங்கிடப்பட்டது. அது தொழிலாளர்களுக்கு உற்சாகத்தை வழங்கி உற்பத்திக்கு முழுமுயற்சியுடன் தொழிற்படத் தொடங்கியது.

இவ்வளவு சிறப்பாக இயங்கிய தொழிற்சாலையில் திடீர் முடக்கம் ஏற்பட்டது. பழுதடைந்த இயந்திரங்களை திருத்துவதற்கான வசதி வாய்ப்புக்கள் எம்மவர்களுக்கு வழங்கப்படவில்லை. அதைவிட உள்நாட்டுக்குழப்பங்கள் தடையாக அமைந்தது. தொழிலாளர்கள் படிப்படியாக இடைநிறுத்தப்பட்டு ஈற்றில் காகிதத் தொழிற்சாலையே மூடுவிழாக் கண்டது. மட்டக்களப்பின் பொருளாதாரம் நலிந்தது. தற்போது மீண்டும் அதனை மீள் நிர்மாணம் செய்வதற்கான முயற்சியை அரசு எடுப்பதாக அறியப்படுகிறது மிக்க மகிழ்ச்சியாக உள்ளது. சதாசிவம் ஐயா அவர்கள் அத்தொழிற்சாலையில் வினியோக முகாமையாளராக கடமையையாற்றி ஓய்வு பெற்றவர். அவர் காகிதத் தொழிற்சாலை தொடர்பான வரலாற்றை நூல் வடிவாக்க பெருமுயற்சி செய்துள்ளார். இவ் வரலாறு இளம் சமுதாயத்தினருக்கு வரலாற்றை அறியும் வாய்ப்பையும் எங்கள் அரசியல் வாதிகளைச் சிந்திக்க வைக்கவும் உதவியாக அமையும். அவரது முயற்சி திருவினையாகட்டும்

வாழ்த்துக்கள்



# வாழ்த்துச்செய்தி

**திருமதி.எஸ்.குலேந்திரகுமார்** (SLEAS-I)
வலயக் கல்விப் பணிப்பாளர்,
வலயக் கல்வி அலுவலகம்,
மட்டக்களப்பு.



முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் அவர்களது பெயரில் உருவாக்கப்பட்ட இசைநடனக் கல்லூரியும் சுவாமி விபுலானந்தரது கல்விச் சிந்தனைகளை நடைமுறைப்படுத்தும் நோக்கில் சுவாமி சிவானந்தரால் ஆரம்பிக்கப்பட்ட சிவானந்தா வித்தியாலயமும் பெருமை சேர்க்கின்ற மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள கிழக்கிலங்கை கடதாசி ஆலை முன்னாள் கற்குடாத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் தெய்வத்திரு வல்லிபுரம் நல்லையா அவர்களால் 1952 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 1956 ஆம் ஆண்டு வர்த்தக ரீதியான உற்பத்தியைத் தொடங்கி 2022 ஆம் ஆண்டு தனது 70 வருட நிறைவாக பிளாட்டினம் யுபிலி (PLATINUM JUBILEE) என்ற விழாவை கொண்டாடுகின்ற வேளையிலே வெளியிடப்படுகின்ற இதழுக்கு ஒரு வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

இலங்கைத் திருநாட்டின் கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழைச்சேனை என்னும் நான் பிறந்த கிராமத்தில் அமைந்துள்ள இந்த கடதாசி ஆலையிலே இலங்கையின் அனைத்து மாகாணங்களிலிருந்தும் பல இனத்தவர்களும் பல மதங்களைப் பின்பற்றுபவர்களும் பல மொழிகளைப் பேசுபவர்களும் ஒரு தாய் பெற்ற பிள்ளைகளைப் போன்று பணி புரிகின்றார்கள். அவர்களது அர்ப்பணிப்பான சேவையின் காரணமாக இந்த ஆலையானது இலங்கை அரசாங்கம் வருடாவருடம் வழங்குகின்ற PRODUCTIVITY AWARD என்கின்ற உற்பத்தித் திறனுக்கான விருதை 1993/94 மற்றும் 1994/95 ஆம் ஆண்டுகளில் பெற்றுக்கொண்டது என்பதை நினைக்கும்போது மிகவும் பெருமையாக உள்ளது.

இக்கடதாசி ஆலையானது சில காலங்களாக மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான உற்பத்தியை மேற்கொள்கின்றமையை நாம் யாவரும் அறிவோம். கிழக்கின், மட்டக்களப்பு மாவட்டத்தில் தொழிற் துறையுடன் உள்ளூர் உற்பத்தியைப் பெருக்கும் ஆர்வத்துடனும் இருக்கக்கூடிய அரசியல் பிரமுகர்கள், தொழில் ஆர்வலர்கள், நலன் விரும்பிகள் அனைவரினதும் துர நோக்கமான சிந்தனையின் கீழ் மிகவும் நவீன தொழில்நுட்ப இயந்திரங்கள் மூலம் இக்கடதாசி ஆலை புனர் நிர்மாணம் செய்யப்படுமாயின் எமது பிரதேசத்தில் கிடைக்கக்கூடிய மூலப் பொருட்களை பயன்படுத்தி உற்பத்தியை (கடதாசி) மேலும் அதிகரிக்கச் செய்வதோடு தொழில் வாய்ப்பற்ற இளைஞர் யுவதிகளுக்கு மீண்டும் ஒரு தொழில் யுகம் மலர வாய்ப்பளிக்கும் என்ற ஆவலும் எமது மாவட்ட மக்களிடையே உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இதழ் ஆசிரியர் திரு.K.சதாசிவம் ஐயா அவர்களுடன் எனது தந்தையாரான திரு.மாணிக்கம் நல்லையா அவர்கள் பல வருடங்களாகப் பணிபுரிந்தவர் என்பதுடன் வாழைச்சேனை கடதாசி ஆலையைப்பற்றி நூல் எழுதி வெளியிட வேண்டும் என்ற திரு.K.சதாசிவம் ஐயா அவர்களின் முயற்சி வெற்றிபெற நான் இறைவனை வேண்டுவதோடு அவரது இம் முயற்சி நல்லதொரு ஆரம்பமாக அமைவதோடு இக்கடதாசி ஆலையானது மீண்டும் புதுப்பொலிவு பெறுமாயின் அது வரலாறாக அமையவும் கூடும். திரு.K.சதாசிவம் ஐயா அவர்களுக்கு எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச்செய்தி

**இ.கிருஷ்ணமூர்த்தி**
**முன்னாள் ஆலை முகாமையாளர்.**



1952ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட எமது வாழைச்சேனை கடதாசி ஆலை, 2022ம் ஆண்டு 70 வருடங்களை பூர்த்தி செய்வதைக் காணும்போது, கடதாசி ஆலை முன்னாள் ஊழியர்களின் நலன்புரிச்சங்க தலைவர் என்னும் ரீதியில் பெருமை அடைகின்றேன். இவ் ஆலை மேலும் முன்னேற்றமடைந்து தொழிலாளர்கட்கும், சுற்றாடலில் உள்ளவர்களுக்கும் மேலும் பல சேவைகளை வழங்க வேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

இவ்வாலையின் சரித்திரத்தைப் பற்றி ஒரு புத்தகமாக வெளியிடுவதற்கு முன் வந்த முன்னாள் உதவி ஆலை முகாமையாளர் (போக்குவரத்து, வினியோகம்) திரு.க.சதாசிவம் அவர்களை பாராட்டுவதோடு, அவருக்கு இறைவன் அருள் கிடைக்க வேண்டுமென வேண்டுகின்றேன்.

**தலைவர்**
**வாழைச்சேனை கடதாசி ஆலை**
**முன்னாள் ஊழியர்கள் மற்றும்**
**பொது மக்கள் புனர்வாழ்வு அமைப்பு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செயலாளரின் செய்தி

எஸ்.தணிகாசலம்
செயலாளர்
முன்னாள் உதவி ஆலை முகாமையாளர்
(மனித வளங்கள்)



இந்நாட்டின் தேசியச் சொத்துக்களிலொன்றான எமது பிரதேசத்திலமைந்துள்ள வாழைச்சேனை காகித ஆலை பற்றிய ஒரு நினைவு மலரை வெளியிட வேண்டும் என்றும் அதில் வாழைச்சேனை ஆலை பற்றி மாத்திரமல்ல பிற்காலத்தில் எமது எதிர்கால சந்ததியினரும் அது பற்றி அறிந்து கொள்ளும் வகையில் இங்கு பணியாற்றிய ஊழியர்களும் இப்பிரதேச மக்களும் அதன் மூலம் அடைந்த பயன்கள் மற்றும் அவர்கள் பணியாற்றிய காலப்பகுதியில் அனுபவித்த கஷ்டங்கள் பற்றிய பல தகவல்களையெல்லாம் உள்ளடக்கி அவற்றை ஆவணப்படுத்தும் வகையில் இந்நினைவு மலர் அமைய வேண்டும் என்று எமது வாழைச்சேனை கடதாசி ஆலை முன்னாள் ஊழியர்கள் மற்றும் பொது மக்கள் புனர்வாழ்வு அமைப்பின் போஷகரான திரு. கந்தையா சதாசிவம் (முன்னாள் உதவி ஆலை முகாமையாளர் (வினியோகமும் போக்குவரத்தும்) அவர்கள் பல தடைகள் மற்றும் விமர்சனங்களுக்கும் மத்தியில் நீண்ட நாட்களாக எடுத்த முயற்சி சாத்தியமாகியுள்ளதென்பதையிட்டு நாம் மிக்க மகிழ்ச்சியும் பெருமிதமுமடைகின்றோம்.

திரு.சதாசிவம் அவர்கள் 1963ஆம்ஆண்டு தொடக்கம் 2002ஆம் ஆண்டு வரை சுமார் முப்பத்தொன்பது வருடங்களாக இவ்வாலையில் பல்வேறு பதவிகளிலும் பணியாற்றி அளப்பரிய சேவையாற்றிய ஒருவராகும். அது மாத்திரமன்றி அவர் சேவையிலிருந்து ஓய்வு பெற்ற பின்னரும் மட்டக்களப்பு மாவட்ட சமாதானக்குழு, போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு, மட்டக்களப்பு றோட்டரிக்கழகம் வர்த்தக சம்மேளனம் உள்ளிட்ட பல்வேறு சிவில் சமுக அமைப்புக்களிலும் பணியாற்றி இம்மாவட்ட மக்களுக்காகப் பல்வேறுபட்ட சமூக நலப்பணிகளை ஆற்றியவராவார்.

இந்நினைவு மலரில் அவர் வாழைச்சேனை காகித ஆலை உருவான வரலாறு, அதற்காகப் பங்களிப்பு வழங்கியோர், தவிசாளர்களாகவும், பொது முகாமையாளர்களாகவும் மற்றும் ஆலை முகாமையாளர்களாகவும் பணியாற்றியோர் பற்றிய விபரங்கள், ஆரம்ப காலம் தொட்டு ஆலையை இயக்குவதில் எதிர் கொண்ட தொழில்நுட்ப மற்றும் நிர்வாகப் பிரச்சனைகள், பிற்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட உற்பத்தி விஸ்தரிப்பு நடவடிக்கைகள், அங்கு பணியாற்றிய ஊழியர்கள் பற்றிய விபரங்கள் மற்றும் அவர்கள் எதிர்கொண்ட சவால்கள், அங்கு பணியாற்றிய ஊழியர்களும் இப்பிரதேசம் வாழ் மக்களும் அடைந்த நன்மைகள் உள்ளிட்ட பல்வேறு தகவல்களையும் உள்ளடக்கியுள்ளார். 1952ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட வாழைச்சேனை காகித ஆலையானது குறிப்பாக 1975ஆம் ஆண்டிற்கு முன்னரும் அதன் பிறகு 1996ஆம் ஆண்டிற்குப் பிற்பட்ட காலத்திலும் தடங்கலற்ற உற்பத்தியை மேற்கொள்வதிலும் ஊழியர்களுக்கான கொடுப்பனவுகளை



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வழங்குவதிலும் பல்வேறு சவால்களை எதிர் கொள்ள நேரிட்டது. இவ்விரு காலப்பகுதிகளிலும் பணியாற்றிய தற்போதும் எம்மத்தியிலுள்ள ஒரு சில முன்னாள் ஊழியர்களில் முதன்மையானவர் திரு.சதாசிவம் அவர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

1994 மற்றும் 1995ஆம் ஆண்டுகளில் தொடர்ச்சியாக இரு முறை அரசின் **தேசிய உற்பத்தித் திறனுக்கான விருதினைப்** பெற்றுக்கொண்டதோடு கடந்த காலங்களில் அரசுக்குப் பல மில்லியன்கள் ரூபா இலாபத்தை ஈட்டிக்கொடுத்த வாழைச்சேனை ஆலையானது உலகத்தரம் வாய்ந்த காகிதம் மற்றும் அட்டைப் பொருட்களை உற்பத்தி செய்யக்கூடிய ஆயுட்கால உத்தரவாதமுடைய இரு இயந்திரங்களுட்பட இன்னும் பல பொறித்தொகுதிகளைக் கொண்டுள்ள இலங்கையிலே உள்ள மிகப் பெரிய தொழிற் சாலைகளிலொன்றாகும். எனினும் முறையான முகாமைத்துவமின்மை, முகாமையின் சில அரசியல் மயப்படுத்தப்பட்ட செயற்பாடுகள், காலத்துக்குக் காலம் ஆட்சிக்கு வந்த அரசின் மாறுபட்ட பொருளாதாரக் கொள்கைகள், எதிர்காலச் சவால்களை சமாளிக்கத்தக்க வகையில் இயந்திரங்களை மேம்படுத்துவதற்கு முகாமையோ அல்லது அரசோ உரிய நடவடிக்கை எடுக்க முடியாமற்போனமை, பல்வேறு சந்தர்ப்பங்களில் முறையற்ற வகையில் அமுல் படுத்தப்பட்ட சுய விருப்பிலான இளைப்பாற்றுத்திட்டங்கள் மூலம் ஏற்பட்ட தொழிற் தகைமை மற்றும் அனுபவம் வாய்ந்த ஊழியர்களின் வெளியேற்றம், அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட அனுபவமும் தகுதியுமுள்ள ஊழியர்களின் பற்றாக்குறை மற்றும் அரசு என்ன நோக்கத்திற்காக இச்சுய விருப்பிலான இளைப்பாற்றுத்திட்டங்களை அமுல் படுத்தத் தீர்மானித்ததோ அதனை நிறைவேற்ற முடியாமற் போனமை போன்ற இன்னோரன்ன துரதிஸ்டமான விடயங்களே பிற்காலத்தில் இந்நிறுவனம் வீழ்ச்சியடைவதற்கான பிரதான காரணங்களாகும்.

1997ஆம் ஆண்டு தொடக்கம் படிப்படியாக நட்டத்தில் இயங்கத் தொடங்கிய இந்நிறுவனமானது குறிப்பாக 2015ஆம் ஆண்டிலிருந்து இங்குள்ள இயந்திரங்கள் அடிக்கடி பழுதடைந்தமை, அவற்றைத் திருத்துவதற்கான உதிரிப்பாகங்களைக் கொள்வனவு செய்யப் போதிய நிதி வசதியில்லாமை என்பனவற்றின் காரணமாக தொடர்ச்சியான உற்பத்தியை மேற்கொள்வதிலும் சேவையிலிருந்த ஊழியர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்குவதிலும் மிகக் கடுமையான பிரச்சனைகளை எதிர்கொண்டது. இச்சந்தர்ப்பத்தில் தொழிற்சங்கங்கள் உட்பட இந்நிறுவனத்தில் பணியாற்றிய பல ஊழியர்களின் பொறுப்பற்றதும் தான்தோன்றித் தனமானதுமான செயற்பாடுகள் காரணமாகவும் சகல ஊழியர்களினதும் சேவைகளையும் சுய விருப்பிலான இளைப்பாற்றுத் திட்டம் மற்றும் கட்டாய இளைப்பாற்றுத்திட்டம் என்பனவற்றின் மூலம் முடிவுறுத்தி இந்நிறுவனத்தை மூடி விடுவதற்கு 2016ஆம் ஆண்டில் அரசினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது. இதன் பிரகாரம் அப்போது வாழைச்சேனை காகித ஆலையில் பணியாற்றிய இரு ஊழியர்கள் தவிர ஏனைய 136 ஊழியர்களதும் சேவைகள் முடிவுறுத்தப்பட்டன. எனினும் அதன் பின்னர் ஆட்சிக்கு வந்த அரசின் தீர்மானத்திற்கிணங்க இவ்வாலையை மூடி விடாது புனரமைப்புச் செய்து மீண்டும் இயக்க நடவடிக்கை எடுப்பதற்கு 2020ஆம் ஆண்டில் அமைச்சரவையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளமை ஒரு வரவேற்கத்தக்க செயற்பாடாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகளாவிய ரீதியில் காகிதப் பாவனை அருகிவரும் நிலையிலும் வாழைச்சேனை காகித ஆலையின் உற்பத்திப் பொருட்கள் பலவற்றிற்கு இன்னும் கிராக்கியுள்ள வேளையில் இவ்வாலையைப் புனரமைத்து மீண்டும் ஓர் இலாபமீட்டும் நிறுவனமாக மாற்றவும் அதன் மூலம் இப்பிரதேசத்திலுள்ள பலருக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலை வாய்ப்புக்களை வழங்கவும் முடியும். இதனடிப்படையில் தற்போது இந்நிறுவனத்தை தனியார் மற்றும் அரசு இணைந்த பங்குடமையின் அடிப்படையில் (PUBLIC PRIVATE PARTNERSHIP) காகித கைத்தொழிலுடன் சேர்த்து பல்துறை உற்பத்திகளை மேற்கொள்ளும் ஒரு கைத்தொழில் வலயமாக அபிவிருத்தி செய்ய நடவடிக்கையெடுக்கப்பட்டு வருவதாக அறிய முடிகிறது. இருந்த போதிலும் இதற்கான நடவடிக்கைகள் மிகவும் மந்தகதியிலேயே நடைபெற்று வருகின்றன.

எனவே இப்பிரதேசத்தினதும் இப்பிரதேசம் வாழ் மக்களினது நலனைக் கருத்தில் கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் இப்பிரதேச அரசியல்வாதிகளும் இவ்விடயத்தில் அதி கூடிய கரிசனை கொண்டு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க முன்வர வேண்டும் என எதிர்பார்க்கிறோம்.

**எஸ்.தனிகாசலம்**
**செயலாளர்**
**வாழைச்சேனை கடதாசி ஆலை முன்னாள் ஊழியர்கள் மற்றும்**
**பொது மக்கள் புனர்வாழ்வு அமைப்பு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காகித ஆலைக்கு வித்திட்ட அமைச்சர் தெய்வத்திரு வ.நல்லையா அவர்களைப் பற்றி ஒரு சில வார்த்தைகள்

- ஆசிரியர் -

திரு.நல்லையா அவர்கள் வல்லிபுரம் தம்பதியினருக்கு 1909ம் ஆண்டு ஐப்பசி மாதம் 7ந் திகதி புத்திரனாக அவதரித்தார். இவர் ஒரு இலங்கைத் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றியவர். இறுதியாக கிழக்கு மாகாணத்திலே அட்டாளச்சேனை அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் அதிபராகக் கடமை புரிந்தவர்.

**அரசியல் வாழ்க்கை:**

இவர் தனது அரசியல் வாழ்வை மட்டக்களப்பு நகர சபையில் அங்கத்தவராக ஆரம்பித்தார். 1943 ம் ஆண்டு நடைபெற்ற இடைத் தேர்தலில் போட்டியிட்டு மட்டக்களப்பு திருமலைக்கான அரச ஆலோசனைச் சபை (STATE COUNCIL) அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பட்டார். 1947ம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு கற்குடாத் தொகுதிக்கான பாராளுமன்ற அங்கத்தவராகத் தெரிவானார். அன்றைய காலகட்டத்திலே இருந்த ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசாங்கத்தில் சேர்ந்து அப்போதய சுகாதார உள்ளூராட்சி அமைச்சருக்கு பாராளுமன்ற செயலாளராகப் பணியாற்றினார். 1952ம்ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிட்டு மீண்டும் பாராளுமன்றத்துக்குத் தெரிவானார். இதனைத் தொடர்ந்து ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தில் தபால், தொலைத்தொடர்பு தகவல்துறை அமைச்சராக சிறிது காலம் பணியாற்றினார். அன்னாரது முயற்சியினால் தான் மட்டக்களப்பிலே ஆதாரவைத்தியசாலை, ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி, வந்தாறுமூலை மகாவித்தியாலயம், மட்டக்களப்பு அரசினர் கல்லூரி மற்றும் வாழைச்சேனை காகித ஆலை என்பன நிறுவப்பட்டன. அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ABOUT THE EDITOR

**i.** MR. KANDIAH SATHASIVAM, Son of Mr. and Mrs. Kandiah of Amirthakali, Batticaloa, born in the year 1942, had his Primary Education at Amirthakali methodist mission School. Secondary Education at Mahajana College and Government College, (Hindu College) Batticaloa.

**ii.** On completion of his Senior School Certificate Examination in Both Arts Stream and Science Stream. he joined the Clerical services of the Eastern Paper Mills Corporation, Valaichenai and continued his services at Valaichenai Paper Mills.

**iii.** While in services at the above organization, he completed the following courses of studies:

iii.i) Diploma In Import and Export Management awarded by the Institute of Management, Colombo.

iii.ii) Diploma in Supplies and Materials Management awarded by the Sri Lanka Institute of Development Administration (S.L.I.D.A, Colombo)

iii.iii) Diploma in Management awarded by the Open University of Sri Lanka, Kandy.

iii.iv) Bachelors Degree (Honours) in Management Studies awarded by the Open University of Sri Lanka, Colombo. (B.M.S.Hons).

**iv.** In addition to the above academic Qualification, he acquired the following professional qualification as well.

iv.i) M.I.S.M.M, Sri Lanka.
(Membership of the Institute of Supplies and Materials Management)

iv.ii) M.C.I.M. England.
(Membership of the Chartered Institute of Management, England).

iv.iii) M.C.I.P.S, London.
(Membership of the Chartered Institute of Purchasing and Supplies, London)

**v.** Work Experience:

i) He served as the Asst. Supplies Manager at Valaichenai Mills for 10 Years.

ii) He served as the Asst. Mills Manager Supplies and Transport at Valaichenai for 06 Years.

iii) He served as Supplies Manager at National Paper Corporation, Head Office, Colombo for 2 Years.

iv) He covered up the Duties of the Mills Manager, Valaichenai in his absence.

v) On his Retirement from the services of Valaichenai Mills he worked for the Norwegian Government in His Capacity as the Secretary of the Sri Lanka Monitoring Mission, Batticaloa District from the year 2002 to 2008.

vi) Social services - He is on the executive Committee of the Rotary Club, Batticaloa. Prisoners Welfare Association and Cancer Society, Batticaloa Region and renders Service to the members of public through these Charity organizations.

I wish him success in his endeavours.

**Dr. K. E. Karunakaran**
**Deputy Vice Chancellor,**
**Eastern University of Sri Lanka**
**Vantharumoolai.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழ் ஆசிரியரின் இதயத்திலிருந்து......



இரண்டாயிரத்து இரண்டாம் ஆண்டு ஜனவரி மாதம் இருபத்தி ஆறாந் திகதி பிற்பகல் நான்கு மணி. ஏறத்தாழ முப்பத்தொன்பது வருட சேவையை வாழைச்சேனை காகித ஆலையில் நிறைவு செய்துவிட்டு ஆலையிலிருந்து பிரியாவிடை பெற்றுக்கொண்டு எவ்வித ஆரவாரமுமில்லாது தன்னந்தனியாக இலங்கை போக்குவரத்துச் சபை பேருந்தைப் பிடிப்பதற்காக ஆலையின் உள்வாசலை நோக்கி வந்து கொண்டிருந்தேன். மனம் நிறைந்த வேதனை ஒரு கையில் எனது *Hand Bag* மற்றக் கையிலே ஒரு பொதி, அது வேறு ஒன்றுமில்லை நான் ஆண்டாண்டு காலமாக எனது காரியாலயத்தில் வைத்து வணங்கும் விக்னேஸ்வரப் பெருமான், முருகப்பெருமான் ஆகியோரது திரு உருவப்படங்கள் அடங்கிய பொதி. இதனை விட என் இதயத்தின் ஒரு பக்கத்திலே நான் இந்த ஆலை என்று சொல்லப்படுகின்ற ஆலயத்தின் மீது வைத்திருக்கும் பாசம். மற்றப் பக்கத்திலே நான் எனது சக ஊழியர்களிடம் வைத்திருக்கும் அன்பு, உள்வாசலை அடைந்ததும் எனது இரு கைகளிலுமிருந்த இரு பொதிகளையும் அவ்விடத்திலேயே வைத்துவிட்டு ஆலை இருந்த திசையைப்பார்த்து சாஸ்டாங்கமாக தரையிலே விழுந்து வணங்கினேன். முப்பத் தொன்பது வருடகாலம் எனக்கு உணவும் உடையும் தந்து பட்டய முகாமைத்துவத்திலே பட்டதாரியாக்கி, தொழில்சார் தகைமைகளையும் பெற உதவிய ஆலை என்கின்ற எனது வளர்ப்பு அன்னையை விட்டுப் பிரிந்து வருவது மிகவும் மன வேதனையாக இருந்தது . பேருந்தில் வரும்போது எனது சிந்தையிலே பின்வரும் சந்தேகங்கள் எழுந்தன. இந்த ஆலையின் உருவம் என்னுடைய சிந்தையிலிருந்து இன்றுடன் மறைந்து விடுமா? இந்த ஆலை பற்றிய ஒரு கையேடு எங்காவது கிடைக்குமா? இல்லை என்றால் உன்னாலாவது ஒரு புத்தகத்தை எழுத முடியுமா? இந்த ஆலையைப் பற்றிய தகவல்கள் எதிர்காலச் சந்ததியினருக்கு தெரிய வாய்ப்புகளுண்டா? இந்த ஆலையினால் ஊருக்கும் உலகத்துக்கும் என்ன நன்மைகள் கிடைத்தது? மேற்குறிப்பிட்ட சந்தேகங்களும் இதயத்தில் உதித்த சிந்தனைகளும் தான் எப்படியாவது இந்த ஆலையைப் பற்றி ஒரு நினைவேடு தயாரிக்க வேண்டும் என்று எண்ணத் தூண்டியது. இந்த நினைவேடு வருங்காலச் சந்ததியினருக்கு எடுத்துகூறக் கூடிய ஒரு கல்வெட்டாக இருக்க வேண்டும் என்பதே எனது அவா. இதன் முடிவுதான் அண்மைக் காலங்களில் ஏற்படுத்தப்பட்ட ஆலோசனைக் கூட்டங்களும் எங்களது முன்னாள் வினியோக உத்தியோகஸ்தர் தெய்வத்திரு தம்பிராஜா ஜெபராஜா அவர்களது இளைய மகன் பிறின்ஸ் அவர்கள் தன்னால் இயன்ற உதவிகளைச் செய்வேன் என்று எங்களுக்குக் கூறிய உறுதி மொழிகளும். திரு பிறின்ஸ் அவர்களுக்கு எங்களது மனமார்ந்த நன்றிகள்.

இந்தச் சந்தர்ப்பத்திலே எனது உற்ற நண்பன் ஜெபராஜா அவர்கள் முன்னொரு காலத்திலே என்னிடம் கூறிய ஒரு தகவலை இந்த இடத்திலே அவரது நேரடி வார்த்தையில் *(Direct language)* குறிப்பிடுவது நான் அவருக்குச் செய்யும் நன்றிக் கடனாக இருக்குமென நம்புகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சதா எனது கண்ணிலே இருந்த ஒரு குறைபாடு எனதுபார்வையை மழுங்கப் பண்ணி விட்டது. இந்த நிகழ்வு நடந்தது நான் இருபத்திஇரண்டு வயது இளைஞனாக இருந்த வேளையிலே, அந்த வேளையிலே கொழும்பிலிருந்து Dr. முரளி என்கின்ற கண் வைத்தியர் மட்டக்களப்புக்கு வந்திருந்தார். எனது தந்தையார் இவரை ஒழுங்கு பண்ணி என். கண்ணிலே சத்திரசிகிச்சை செய்வித்தார். அது பூரண வெற்றி அளித்தது. அந்தப் பெருந்தகைக்கு நன்றிக்கடன் செய்யும் நோக்கோடு எனது மூத்த மகனுக்கு 'முரளி' என்று பெயரிட்டேன்."

"நான் *Grade Five* படிக்கும் போது எனது வகுப்பாசிரியையாக அன்பும் பண்பும் உள்ள ஓர் ஆசிரியை எனக்கு அமைந்தார். மிகவும் அன்பாக எனக்குப் பாடம் புகட்டுவார் ஒரு நாளும் என்னைத் தண்டித்ததோ, கோபித்ததோ கிடையாது. அவவின் பெயர் சுமதி. இந்த பெருந்தகையின் ஞாபகார்த்தமாக எனது மகளுக்கு "*LYDIA SUMATHY*" எனப் பெயர் சூட்டினேன்." "அடுத்த படியாக எனது பாடசாலை வாழ்க்கை. மட்டக்களப்பு மத்திய கல்லூரியில் நான் கல்வி பயின்ற கால கட்டம் இந்தப் பாடசாலை வாழ்க்கை தான் எனது வாழ்வில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது. இதற்கு அத்திவாரமிட்டு என்னை இந்த நிலைக்கு உயர்த்திவிட்டவர் எனது ஆசான் "*PRINCE CASINADER*" எனது வாழ்நாளில் அவரை நான் மறக்கமுடியாது மறக்கவும்கூடாது. அந்தப் பெருந்தகைக்கு நான் நன்றிக்கடன் செலுத்த வேண்டும் என்பதற்காக எனது உயிருக்கு உயிராக இருக்கின்ற எனது இளைய மகனுக்கு "*PRINCE*" எனப் பெயர் சூட்டினேன்.

திரு.ஜெபராஜா அவர்கள் நன்றி மறவாத ஒரு பெருந்தகை - அன்னாரது மரண நிகழ்விலே மூன்றுபேர் உரையாற்றினார்கள். அதில் ஒருவர் முன்னாள் மத்தியகல்லூரி அதிபர் அருள்ராஜ் மற்றையவர் "*PRINCE CASINADER*" மூன்றாவது நபர் அடியேன். இந்தப் பெருந்தகையைப் பற்றி அவரது இறுதி நிகழ்விலே ஒரு சில வார்த்தைகள் பேசக் கிடைத்ததையிட்டு மன ஆறுதல் அடைகின்றேன். "நன்றி உணர்வே நல்ல வழிபாடு" என்று நமது முன்னோர் கூறிய கூற்றுக்கு அமரர் திரு ஜெபராஜா அவர்கள் ஒரு நல்ல உதாரண புருஷர் இந்த இடத்தில் இதைப்பற்றி குறிப்பிடுவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

என்னை வளர்த்து விட்ட எனது வளர்ப்புத் தாயான இந்த வாழைச்சேனை ஆலையைப்பற்றி ஒரு நூல் எழுதவேண்டும். இந்த ஆலைக்கு வித்திட்டவர்கள், உரமூட்டி விட்டவர்கள், இந்த ஆலைக்காக வியர்வையும் இரத்தமும் சிந்தியவர்கள், ஆலையிலே சேவை புரிந்து உயிர் நீத்தவர்கள், ஆலைக்காக உயிர் துறந்தவர்கள் ஆகியோரது விபரங்கள் அந்த நூலிலே உள்ளடக்கப்படவேண்டும் என்று நான் கண்ட கனவு இருபதுவருடங்களுக்குப் பின்னராவது நனவாகியதையிட்டு ஆத்ம திருப்தி அடைகின்றேன். இந்த இதழினை தயார் செய்வதற்கும் வெளியிடுவதற்கும் எனக்குப் பல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும் விசேடமாக முன்னாள் ஊழியர்களின் நலன்புரிச்சங்க நிர்வாகக்குழு அங்கத்தவர்களுக்கும் முன்னாள் ஆலை முகாமையாளர்களுக்கும் மற்றும் ஏனையோருக்கும் மற்றும் இந்த இதழுக்கு ஆசியுரை, வாழ்த்துரை ஆகியவற்றை வழங்கிய பெரியோர்களுக்கும் இதழுக்கு அனுசரணை வழங்கிய திரு.பிறின்ஸ் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த வேளையிலே எனது நிலைப்பாட்டினை முன்வைக்கின்றேன். இந்த இதழிலே ஏதாவது குறைகள் காணப்படுமிடத்து அடுத்த பதிப்புக்களில் அவை நிறைவு செய்யப்படுமென்று பணிவுடன் கூறிக்கொள்கின்றேன்.

**இவ்வண்ணம்**
**முன்னாள் உதவி ஆலை முகாமையாளர்**
**தேசகீர்த்தி கந்தையா சதாசிவம் (ச.நீ)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காகித ஆலையின் தோற்றமும் வளர்ச்சியும்

## காகித ஆலை அமைந்துள்ள கிழக்கு மாகாணம் 1940ஆம் ஆண்டுகளில் இருந்த நிலை

இலங்கையின் ஒன்பது மாகாணங்களில் அதி கூடிய விஸ்தீரணத்தைக் கொண்ட மாகாணமாக கிழக்கு மாகாணம் விளங்கியது. வடக்கே- கொக்கிளாயும், தெற்கே- குமணையும், கிழக்கே - இந்துமகா சமுத்திரமும், மேற்கே- பதியதலாவை, சியம்பலாண்டுவை தொடக்கம் தெகியத்த கண்டிய வரையுமான பிரதேசங்கள் இதன் எல்லையாக அமைந்திருந்தன. திருகோணமலை, பொலநறுவை, மட்டக்களப்பு, அம்பாறை, மொனராகல, ஆகிய ஐந்து மாவட்டங்களும் கிழக்கு மாகாணத்திற்குள் உள்ளடக்கப்பட்டிருந்தன. உலகின் இரண்டாவது மிகப்பெரிய இயற்கை துறைமுகமான திருகோணமலை, உல்லாசப் பயணிகளை கவருகின்ற பாசிக்குடாக் கடல், பாடும் மீன் ஓசை எழுப்புகின்ற கல்லடிப்பாலம் ஆகியவை இம் மாகாணத்துக்கு மெருகூட்டின. நீர்வளம், நிலவளம், வனவளம் ஆகிய இயற்கை வளங்கள் நிறைந்த மாகாணமாக இந்த மாகாணம் காணப்பட்டது.

மட்டக்களப்பு பிரதேசத்திலே அமைந்துள்ள ஏறாவூரை அண்டிய இடங்களான தளவாய், சவுக்கடி, சுட்டகாடு தும்பாலஞ்சோலை, கறடியனாறு போன்ற பிரதேசங்கள் யானைகளின் சரணாலயமாக விளங்கின. *1959ம் ஆண்டு வெளியான SUNDAY OBSERVER* பத்திரிகைச் செய்தியின் படி ஏறாவூரை அண்டிய தளவாய் என்ற பிரதேசத்திலே பிடிக்கப்பட்ட யானை ஏறாவூரைச் சேர்ந்த அலியார் என்ற பணிக்கரால் (யானைப் பாகன்) பயிற்றுவிக்கப்பட்டு முதன் முதலாக கண்டி தலதா மாளிகையிலே புத்த பகவானது புனித தந்தத்தினை சுமக்கும் பணியிலே அமர்த்தப்பட்டது. இந்த யானை இறந்த பின்னரும் இதன் எலும்புக்கூடு பத்திரப்படுத்தப் பட்டு தற்போதும் மக்களின் பார்வைக்காக தலதா மாளிகையில் வைக்கப்பட்டுள்ளது என்று அந்தச் செய்தி உறுதிப்படுத்தியுள்ளது.

இதே பத்திரிகை இன்னும் ஒரு செய்தியையும் வெளியிட்டது. வாழைச்சேனை கடதாசி ஆலைக்குச் சொந்தமான இலுக்குப்புல் பண்ணை அமைந்துள்ள புணாணை என்ற பிரதேசத்தில் மூன்று பொதுமக்களைக் கொன்ற *"MAN EATER"* என பெயர் சூட்டப்பட்ட சிறுத்தைப் புலியானது வாகனேரி என்ற காட்டுப் பிரதேசத்தில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டது. இத்தகைய இயற்கை வளங்களைக் கொண்ட கிழக்கு மாகாணத்திலே தமிழர், சிங்களவர், இஸ்லாமியர், பறங்கியர் என்கின்ற நான்கு இனத்தவர்களும் ஐக்கியமாக வாழ்ந்தனர். இந்த மாகாணத்தின் தலை நகராக மீன்பாடும் தேன்நாடு என்றும் "மீன் மகள் பாடுகிறாள் வாவி மகள் ஒடுகிறாள். மட்டு நகர் அழகான ஊரம்மா" என்றும் சுவாமி விபுலாநந்தரால் புகழ்ந்து பாடப்பட்ட மட்டுமா நகர் விளங்குகின்றது.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

#### மக்களின் வாழ்வாதாரம் :

இங்குள்ள மக்களின் முக்கிய ஜீவனோபாயமாக விவசாயமும் மீன் பிடியுமே இருந்தது. இஸ்லாமியர்கள் வியாபாரத்திலும், பறங்கியர் தச்சுத் தொழிலிலும் ஈடுபட்டனர். ஏனையோர் கூலித்தொழிலையே தங்களது ஜீவனோபாயமாகக் கொண்டிருந்தனர்.

#### கல்வி நிலை :

கிழக்கு மாகாணமானது திருகோணமலை, பொலநறுவை, மட்டகளப்பு, அம்பாறை, மொனறாகலை ஆகிய ஐந்து மாவட்டங்களை உள்ளடக்கி இருந்தாலும் இந்த மாகாணத்திலே ஒரு அரசாங்கப் பாடசாலையேனும் நிறுவப்பட்டிருக்கவில்லை. கிழக்கு மாகாணத்தின் தலைப் பட்டினமாக இருந்த மட்டக்களப்பு நகரில் றோமன் கத்தோலிக்க மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்காக புனித மிக்கேல் கல்லூரியும், தெரேசா பெண்கள் பாடசாலையும், புனித சிசிலியா பெண்கள் பாடசாலையும், மெதடிஸ்த மாணவர்களுக்காக மட்டக்களப்பு மத்திய கல்லூரியும், வின்சன்ட் மகளிர் பாடசாலையும், அரசடி மெதடிஸ்த மிசன் / கலவன் பாடசாலையும், அமிர்தகழி மெதடிஸ்த மிசன் ஆரம்ப பாடசாலையும் பாலமீன் மடு மெதடிஸ்த மிசன் கலவன் பாடசாலையும் நிறுவப்பட்டிருந்தன. இதனை விட இராமகிருஷ்ண மிசன் துறவிகளால் சிவானந்த வித்தியாலயமும் நிறுவப்பட்டது. மேற் குறிப்பிட்ட பாடசாலைகள் அத்தனையுமே தனியார் பாடசாலைகள் ஒரு அரசாங்கப் பாடசாாலையேனும் கிழக்கு மாகாணத்தில் நிறுவப்பட்டிருக்கவில்லை. அரசாங்க பாடசாலைகள் இல்லாததன் காரணமாக கிழக்கு மாகாண மாணவர்கள் பின்வரும். இழப்புகளைச் சந்தித்தனர்.

- ஐந்தாம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்த மாணவர்கள் அரசாங்க பாடசாலைகளில் விடுதி வசதி வாய்ப்புடன் தங்கி இருந்து பல்கலைக்கழகம் செல்லும் வரை அரசாங்க செலவில் கல்வி பயிலும் வாய்ப்பு.
- எட்டாம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள் அரசினர் பாடசாலைகளில் அரசாங்க செலவில் சிரேஸ்ர பாடசாலை தராதரப் பத்திர சாதாரணதர மற்றும் உயர்தர வகுப்புகளில் விஞ்ஞானம், கணிதம் ஆகிய துறைகளில் கல்வி பயின்று வைத்தியர்களாகவும், பொறியியலாளர்களாகவும் வரக்கூடிய வசதி வாய்ப்புகள்.
- ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி இல்லாததன் காரணத்தால் தராதரப் பத்திரம் அற்ற ஆசிரியர்கள் தங்களது சொந்த ஊரிலே பயின்று பயிற்றப்பட்ட ஆசிரியர்களாகவும், அதிபர்களாகவும் முன்னேற்றம் அடையும் வாய்ப்பு.
- ஒரு வைத்தியசாலை இல்லாததன் காரணத்தால் நோயுற்றவர்களை வெளி மாவட்டங்களுக்கு கொண்டுசெல்லும் துர்ப்பாய்க்கிய நிலை.
- கிழக்கு மாகாணம் எல்லா விதமான இயற்கை வளங்களையும் கொண்ட பிரதேசமாக இருந்தும் எந்த விதமான தொழிற்சாலைகளும் இல்லாததன் காரணத்தால் இந்த கிழக்கு மாகாண இளைஞர்களும் யுவதிகளும் வேலை வாய்ப்புகளை இழந்தனர்.

#### திரு. நல்லையா அவர்களின் வருகை :

கிழக்கு மாகாண மக்கள் மேற்கூறிய அவலங்களை எதிர்கொண்டிருந்த வேளையில் அவர்களின் அடிப்படைத் தேவைகளைச் சரியாக அடையாளம் கண்டு தெய்வத் திரு வல்லிபுரம் நல்லையா அவர்கள் கிழக்கு மாகாண மக்களின் பராளுமன்ற உறுப்பினராக சேவையாற்ற முன் வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாசிக்குடா
மட்டக்களப்பு



கல்லடிப்பாலம்
மட்டக்களப்பு



போதனா வைத்தியசாலை
மட்டக்களப்பு



துறைமுகம்
திருகோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திரு. வல்லிபுரம் நல்லையா கற்குடா பாராளுமன்ற உறுப்பினர், Member of State Council அவர்கள் ஆற்றிய சேவை

**பாடசாலைகளை நிறுவுதல் :**

- வந்தாறுமூலை மகா வித்தியாலயம் ஐந்தாம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்காக விடுதி வசதியுடன் கூடிய வித்தியாலயம். 1946ம் ஆண்டு இப் பாடசாலை நிறுவப்பட்டது. இந்த பாடசாலையில் கிழக்கு மாகாணத்தில் சகல பகுதிகளிலும் இருந்து வந்து சேர்ந்தவர்கள் ஆறாம் வகுப்பில் சேர்க்கப்பட்டு பல்கலைக்கழகம் செல்லும் வரை அரச செலவில் கல்வி பயின்றனர். இந்த பாடசாலையிலே ஆரம்ப காலத்தில் கல்வி கற்ற மாணவர்களில் பின்வருவோரும் உள்ளடங்குவர்.
- காகித ஆலையிலே முகாமையாளராக சேவை ஆற்றிய அமிர்தகழியைச் சேர்ந்த அமரர் திரு.இளையதம்பி கணபதிப்பிள்ளை அவர்கள்
- மட்டக்களப்பு மட்டிக்களியைச் சேர்ந்த மண்டூர் மகா வித்தியாலய அதிபர் சட்டத்தரணி காலம் சென்ற தங்கராசா வேலாயுதபிள்ளை அவர்கள்.
- மட்டகளப்பு சீலாமுனையைச் சேர்ந்த பேராசிரியர் சி.மௌனகுரு அவர்கள்.
- **மட்டக்களப்பு அரசினர் கல்லூரி**
  இக்கல்லூரி அண்மையில் மட்டக்களப்பு இந்துக் கல்லூரி எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

1946ம் ஆண்டு இக் கல்லூரி நிறுவப்பட்டது. கடந்த வருடம் தனது 75 ஆண்டு நிறைவை (பிளாட்டினம் யுபிலி) கொண்டாடியது. 8ம் வகுப்பில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றவர்கள் கல்வி கற்று வைத்தியத்துறை, பொறியியல்துறை ஆகிய துறைகளில் முன்னேறுவதற்காக நிறுவப்பட்ட கல்லூரி. இக் கல்லூரியில் ஆரம்ப கால மாணவர்களாக கல்வி கற்றவர்களுள் பின்வருவோரும் உள்ளடங்குவர்.

- மட்டக்களப்பு அமிர்தகழியைச் சேர்ந்த பொறியியலாளர் பாலசுந்தரம் அருளையா
- மட்டகளப்பைச் சேர்ந்த பொறியியலாளர் கந்தையா ஆறுமுக வடிவேல்
- இளைப்பாறிய அதிபர் பொன் தவநாயகம்
- முன்னாள் கட்டிடத் திணைக்கள பிரதம பொறியியலாளர் திருமதி. யோகராணி மகாலிங்கம்
- கிழக்குப் பல்கலைக்கழக முன்னாள் வேந்தர் வைத்திய கலாநிதி விவேகானந்தராஜா
- நீர்ப்பாசனத் திணைக்கள பொறியியலாளர் அமரர் சிதம்பரப்பிள்ளை மனோகரதாஸ் அவரது சகோதரர் பொறியியலாளர் அமரர் சுகுணதாஸ்
- மற்றும் முன்னாள் திறைசேரி பிரதிப் பிரதம செயலாளர் அமரர் நமசிவாயம் பத்மநாதன் ஆகியோரும் இக் கல்லூரியின் பழைய மாணவர்களுள் உள்ளடங்குவர்.

**மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை**

- இக் கல்லூரியும் 1946ம் ஆண்டு நிறுவப்பட்டது. இக் கல்லூரியின் மூலம் தராதரப்பத்திரம் அற்ற தமிழ் ஆசிரியர்கள் பயிற்றப்பட்ட ஆசிரியர்களாகவும் அதிபர்களாகவும் முன்னேற வாய்ப்புகள் வழங்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மட்டக்களப்பு ஆதார வைத்தியசாலை நிறுவுதல்.**

- இவ்வைத்தியசாலை நிறுவப்பட்டதன் மூலம் இங்குள்ள மக்கள் சிகிச்சை பெறுவதற்காக வெளி மாவட்டங்களுக்குச் செல்லும் துர்ப்பாக்கிய நிலை தவிர்க்கப்பட்டது. ஆதாரவைத்திய சாலையாக நிறுவப்பட்ட இந்த வைத்தியசாலை இன்று முழு மட்டக்களப்பு மாவட்டத்திற்குமே சேவையாற்றக் கூடிய போதனா வைத்திய சாலையாக முன்னேற்றம் அடைந்துள்ளது. கிழக்குப் பல்கழைக்கலகத்திலே வைத்திய பிரிவில் கல்வி கற்கும் மாணவர்கள் தங்களது கல்வி நடவடிக்கைகளுக்காக வெளிமாவட்டங்களுக்குச் செல்லாது மட்டக்களப்பிலேயே தங்களது பயிற்சிகளை பெற்றுக்கொள்ளக்கூடிய அளவுக்கு இந்த வைத்தியசாலை முன்னேற்றம் அடைந்துள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வாழைச்சேனை கடதாசி ஆலை

கிழக்கு மாகாணத்திலுள்ள வளங்களைப் பயன்படுத்தி ஒரு அரசாங்கத் தொழிற்சாலை அமைக்கவேண்டும். இந்தத் தொழிற்சாலை இங்குள்ள . இளை ஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்புகளை வழங்க வேண்டும். என்ற அமரர் வல்லிபுரம் நல்லையா அவர்களின் முயற்சியின் பலனாக நிறுவப்பட்ட தொழிற்சாலை தான் வாழைச்சேனை காகித ஆலை.

## ஆலையை இங்கு நிறுவுவதற்கான காரணிகள்:-

1. காகித உற்பத்திக்கு மூலப்பொருளான வைக்கோல் வாழைச்சேனையிலும் அதனை அண்டிய பகுதிகளான புணாணை, மன்னம்பிட்டி, பொலன்னறுவை, கொடுவாமடு, மட்டக்களப்பு, ஏறாவூர் போன்ற பகுதிகளில் அதிகமாகக் கிடைக்கக் கூடியதாக இருந்தது.
2. வாழைச்சேனைக்கு அருகாமையிலுள்ள வாகனேரி என்ற இடத்திலே அமைந்துள்ள நீர்ப்பாசனக் குளத்திலிருந்து வேண்டிய அளவு நீரைப்பெற்றுக் கொள்ளக்கூடிய வசதி வாய்ப்பு இருந்தமை.
3. வாழைச்சேனை புகையிரத நிலையம் பக்கத்திலே அமைந்துள்ளமையும் தேவையான பெற்றோலியப் பொருட்களை எவ்வித சிரமமுமின்றிப் பெற்றுக்கொள்ளக் கூடிய வசதி வாய்ப்பு இருந்தமை.
4. ஓலுவில் சம்மாந்துறை ஆகிய பகுதிகளில் வைக்கோல் சேகரிப்பு நிலையங்களை நிறுவி தேவையான அளவு வைக்கோலைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வசதி வாய்ப்பு இருந்தமை.
5. உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை எவ்வித சிரமமுமின்றி வெளி மாகாணங்களுக்கு புகையிரத மூலமும் லொறிகள் மூலமும் எடுத்துச் செல்லக்கூடிய வசதி வாய்ப்பு இருந்தமை.
6. காகிதம் செய்வதற்கு தேவையான மூலப் பொருள்களாகப் பாவிக்கக் கூடிய இலுக், *Eucalyptus*, கெனாப் போன்றவற்றை சாகுபடி செய்யக்கூடிய அளவிற்கு போதுமான நிலம் இருந்தது.
7. ஆலை அமைப்பதற்குத் தேவையான காணி வாழைச்சேனையிலும் புணாணையிலும் இருந்தமை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. வாழைச்சேனைக்கு அருகாமையில் கற்குடாத் துறைமுகம் அமைந்துள்ளதால் தேவையேற்படும் பட்சத்தில் கடல்வழி மூலமாகவும் பொருட்களைக் கொண்டு செல்லக்கூடிய வசதி வாய்ப்புகள்

9. கிழக்கு மாகாணத்திலே அரசாங்க உத்தியோகத்தில் உள்ளவர்கள் ஒப்பீட்டு ரீதியாக மிகவும் குறைவு அனேகமானோர் தொழில்வாய்ப்பை எதிர் பார்த்துக்கொண்டு இருப்பவர்கள்.

10. இரண்டாவது உலக மகா யுத்தத்திற்குப் பின்னர் ஒவ்வொரு தேசமும் தமக்குத் தேவையான பொருட்களைத் தாமே உற்பத்தி செய்ய வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்தனர்.

மேற்கூறிய காரணங்களுக்காக கடதாசி ஆலை ஒன்று வாழைச்சேனையில் நிறுவப்பட வேண்டும் என்று தெய்வத்திரு வல்லிபுரம் நல்லையா அவர்களால் விடுக்கப்பட்ட வேண்டுகோள் முன்னாள் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் அமரர் ஜி.ஜி. பொன்னம்பலம் அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் 1952ம் ஆண்டின் முற்பகுதிகளில் ஆரம்பமாயின. எனினும் வர்த்தக ரீதியான உற்பத்தி 1956ம் ஆண்டே ஆரம்பிக்கபபட்டது.

கிழக்கு மாகாணம் விவசாயத்திற்குப் பெயர் போன காரணத்தினால் நிறுவப்பட இருக்கும் ஆலை விவசாயப் பொருட்களை அடிப்படையாகக் கொண்டு (Agro Based Industry) செயல்படுமானால் அது சாலப் பொருத்தமாக இருக்கும் என்ற யோசனையை முன்வைத்தவர் வேறுயாருமல்ல எங்களது கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் அமரர் ஜி.ஜி. பொன்னம்பலம் அவர்களே. இந்த ஆலைக்குத் தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகள் உத்தியோகத்தர்களுக்குத் தேவையான பயிற்சிகள் யாவற்றையும் வழங்குவதற்கு மேற்கு ஜேர்மன் அரசாங்கம் ஒப்புதல் வழங்கி இருந்தது. இதன் அடிப்படையிலேயே கிழக்கு மாகாணத்தில் வாழைச்சேனை என்னும் பிரதேசத்தில் அரசாங்கத்துக்குச் சொந்தமான 330 ஏக்கர் காணியில் வாழைச்சேனை கடதாசி ஆலை "அரசாங்க ஆலை (Govt Factory)" என்ற பெயருடன் நிறுவப்பட்டது.

## கடதாசி ஆலையின் அமைவிடம்

கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்திலே கோறளைப்பற்றுப் பகுதியில் மட்டக்களப்பு கொழும்பு சாலை அருகே ஓட்டமாவடிப் பாலத்துக்கும் வாகனேரிக்கும் இடைப்பட்ட பகுதியில் அரசுக்குச் சொந்தமான காணியில் அமைந்துள்ளது. இங்குதான் காகித ஆலை என்று சொல்லப்படுகின்ற எங்கள் வளர்ப்பு அன்னை மட்டுமா நகரை உற்று நோக்கியவாறு காகித ஆலையைத் தனது குழந்தையாக நினைத்து அரவணைத்துக் கொண்டிருக்கின்றாள்.

## TECHNICAL DETAILS OF VALAICHCHENAI PAPER MILL

அமைக்கப்பட்ட ஆலையின் தொழில்நுட்ப விபரங்கள் பின்வருமாறு.

பெயர் : ஒன்றிணைக்கப்பட்ட கடதாசி கூழ் மற்றும் கடதாசி உற்பத்தி செய்யும் ஆலை. *Integrated Pulp and Paper Mill*

## உற்பத்தி செய்யப்பட்ட கடதாசி வகைகள்.

| | |
|---|---|
| *Cream wove writing paper* | *56 gsm* |
| *ledger paper* | *98/112 gsm* |
| *White printing* | *60/65 gsm* |
| *White board* | *210 gsm* |
| *White Bristol board* | *210 gsm* |
| *Unruled writing* | *60 gsm* |
| *White duplicating* | *75 gsm* |
| *Cover paper* | *90/110/125/135 gsm* |
| *Corrugating medium* | *112 gsm* |
| *Manilla paper* | *70/80 gsm* |
| *Marker Paper* | *52 gsm* |
| *Unbleached printing* | *52/65/67 gsm* |
| *Kraft paper* | *110 gsm* |
| *Test liner* | *140/150/180 gsm* |

## கடதாசி உற்பத்திக்கான மூலப்பொருள்

ஆலையின் ஆரம்ப காலத்திலேயே கடதாசி உற்பத்திக்கு மூலப்பொருளாக இலுக் எனப்படும். புல்லையே பாவிப்பது என்ற தீர்மானத்துக்கமைய தேவையான இலுக் புல்லினை அறுவடை செய்யும் நோக்குடன் இங்கே ஒரு பண்ணை நிறுவப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இலுக் பண்ணையின் அமைவிடம்

வாழைச்சேனையின் வடபுறமாக சுமார் 12 கிலோ மீட்டர் தூரத்தில் கொழும்பு - மட்டக்களப்பு வீதியில் வாகனேரிக்கும் வெலிக்கந்தைக்கும் இடையில் புணாணை என்னும் பிரதேசத்தில் அரச காணியில் சுமார் 1600 ஏக்கர் நிலப்பரப்பில் இப்பண்ணை அமைந்துள்ளது. இந்தப் பண்ணையின் முகாமையாளராக யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையைச் சேர்ந்த அமரர் S.தேவராஜா அவர்கள் நியமிக்கப்பட்டார். இந்தப் பண்ணையானது முறையாகச் செயற்பட்டபோதும் அங்கு அறுவடை செய்யப்பட்ட இலுக் புல் வாழைச்சேனை காகித ஆலையில் கடதாசி உற்பத்தியைத் தொடர்ந்து செய்வதற்குப் போதுமானதாக இருக்கவில்லை. இதன் காரணமாக வாழைச்சேனை ஆலையின் உற்பத்தி அடிக்கடி தடைப்பட்டது. இதைக் கண்ணுற்ற கைத்தொழில் அமைச்சு வாழைச்சேனை ஆலையை மூடிவிடலாம் என்ற முடிவுக்கு வந்து இந்த ஆலையை என்ன மாற்று வழிகளில் இயக்க முடியும் என்ற சிந்தனையில் செயற்பட்டது. இந்த வேளையில் தான் பழம் நழுவிப் பாலில் விழுந்தது போன்று புத்தாக்க சிந்தனையுடைய திரு. கே.சி.தங்கராசா அவர்கள் இந்த ஸ்தாபனத்தின் தலைமைப் பதவியைப் பொறுப்பேற்றார். அவரது சிந்தையில் உதித்த யோசனை தான் மூலப்பொருளில் மாற்றம் ஏற்படுத்தலாம் எனபது.

### மூலப்பொருளில் மாற்றம்

இந்தப் பெருந்தகையின் தேடுதலில் பின்வரும் தகவல்கள் சிக்கின. அதாவது கரும்புச் சக்கை, மூங்கில், சணல், வைக்கோல், கழிவுக்கடதாசி ஆகியவற்றை பாவித்து அயல் நாடான இந்தியாவில் தரமான கடதாசி உற்பத்தி செய்யப்படுகிறது என்ற தகவல். உடனடியாக செயலில் இறங்கிய கே.சி. தங்கராஜா அவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்த பெருந்தகை முன்னாள் ஆலை முகாமையாளர் அமரர். தம்பு ஜெயசிங்கம் அவர்கள். அன்னார். மேற்குறிப்பிட்ட மூலப்பொருட்களின் உபயோகம், விலை மற்றும் கிடைக்கக்கூடிய அளவு ஆகியவற்றைப் பரிசீலித்து வைக்கோலும் கழிவுக் கடதாசியும் மிகப் பொருத்தமான மூலப் பொருட்கள் என்று சிபார்சு செய்ததன் பேரில் வாழைச்சேனை ஆலையில் ஒரு திருப்பு முனை ஏற்பட்டது. தாராளமாகக் கிடைக்கக்கூடிய வைக்கோலும் கழிவுக் கடதாசியும் எவ்வித தங்கு தடையுமின்றிப் பாவிக்கப்பட்டது. மலிவான விலையிலும் கிடைத்தது. வைக்கோல், கழிவுக்கடதாசி ஆகியவை பாவிக்கப்பட்டதன் மூலம் நஸ்டத்தில் இயங்கிய வாழைச்சேனை ஆலை இலாபகரமாக செயல்பட ஆரம்பித்தது. இந்தக் கால கட்டத்தில் ஆலை முகாமையாளராகக் கடமையாற்றிய அமரர் தம்பு ஜெயசிங்கம் அவர்களின் அர்ப்பணிப்பான சேவை பாராட்டுக்குரியது. அன்னாரது முயற்சியினாலும் கூட்டுத்தாபன தலைவர் கே.சி.தங்கராஜா அவர்களது திட்டமிட்ட செயற்பாடுகளினாலும் வாழைச்சேனை ஆலையில் இரண்டாவது இயந்திரமாக அட்டை இயந்திரம் பொருத்தப்பட்டது. கடதாசி அட்டை ஆலை வைபவ ரீதியாக 1972ம் ஆண்டு அப்போதைய கைத்தொழில் அமைச்சர் திரு. பிலிப் குணவர்த்தன அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அந்தக் காலத்தை வாழைச்சேனை ஆலையின் பொற்காலம் என்று சொல்லலாம்.

### 1972ம் ஆண்டு பொருத்தப்பட்ட அட்டை ஆலையின் தொழில்நுட்ப விபரங்கள் பின்வருமாறு:

பெயர் : அட்டை ஆலை
பொருத்தப்பட்ட வருடம் : 1972
மதிப்பீட்டு அளவு - *44.0 metric tons per day*
ஆரம்ப முதலீடு : ரூபாய் : 66 மில்லியன்
*Deckle size 95 inches*
உற்பத்தி செய்யப்படும் பொருட்கள்:

| | |
|---|---|
| *Box Board* | *250/300/350/400/450/500 gsm* |
| *Case Cover* | *300 gsm* |
| *Corrugating medium* | *112 gsm* |
| *Chip Board* | *250/400/450/500 gsm* |
| *Manilla Board* | *250 /265 gsm* |
| *Board* | *180 / 210 gsm* |
| *Mill wrapper Paper* | *180 / 210 gsm* |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1956ம் ஆண்டிலிருந்து 1995ம் ஆண்டுவரையான காலப் பகுதியில் வாழைச்சேனை கடதாசி ஆலை மற்றும் அட்டை ஆலை ஆகியவற்றின் உற்பத்திகள்**

| வருடம் | கடதாசி ஆலை M.Tons | அட்டை ஆலை M.Tons | மொத்தம் M.Tons |
|---|---|---|---|
| *1956* | *360* | - | *360* |
| *1957* | *1418* | - | *1418* |
| *1958* | *1246* | - | *1246* |
| *1959* | *4087* | - | *4087* |
| *1960* | *4563* | - | *4563* |
| *1961* | *4527* | - | *4527* |
| *1962* | *4691* | - | *4691* |
| *1963* | *5341* | - | *5341* |
| *1964* | *6451* | - | *6451* |
| *1965* | *7424* | - | *7424* |
| *1966* | *4021* | - | *4021* |
| *1967* | *10100* | - | *10100* |
| *1968* | *8874* | - | *8874* |
| *1969* | *9324* | - | *9324* |
| *1970* | *9751* | - | *9751* |
| *1971* | *9774* | - | *9774* |
| *1972* | *9369* | *7989* | *17358* |
| *1973* | *10063* | *10842* | *20905* |
| *1974* | *8339* | *10319* | *18658* |
| *1975* | *8981* | *11633* | *20614* |
| *1976* | *8081* | *10023* | *18104* |
| *1977* | *9508* | *11418* | *20926* |
| *1978* | *7545* | *9360* | *16905* |
| *1979* | *8296* | *8018* | *16314* |
| *1980* | *6722* | *6529* | *13251* |
| *1981* | *7445* | *8955* | *16400* |
| *1982* | *6879* | *8108* | *14987* |
| *1983* | *5932* | *7991* | *13923* |
| *1984* | *6478* | *8029* | *14507* |
| *1985* | *7452* | *9384* | *16836* |
| *1986* | *7558* | *9733* | *17291* |
| *1987* | *6584* | *9347* | *15931* |
| *1988* | *6687* | *8741* | *15428* |
| *1989* | *5272* | *6825* | *12097* |
| *1990* | *4220* | *6581* | *10801* |
| *1991* | *5963* | *9518* | *15481* |
| *1992* | *7486* | *10955* | *18441* |
| *1993* | *6814* | *11365* | *18179* |
| *1994 / 95* | *7762* | *13027* | *20789* |
| *1995 / 96* | *7199* | *11032* | *18231* |
| *1996 / 97* | *7915* | *2937* | *10852* |
| *1997 / 98* | *6230* | *7691* | *13921* |

*No Production for about 3 Months due to the power cut of Habarana supply during insurgency*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1974ம் ஆண்டு தொடக்கம் 1998ம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வாழைச்சேனை காகித ஆலை மற்றும் அட்டை ஆலையிலிருந்து பெற்ற இலாபம்.**

| வருடம் | மொ.உற்பத்தி | இலாபம் - 10,00000 |
|---|---|---|
| 1974 | 18658 | 14.95 |
| 1975 | 20614 | 10.03 |
| 1976 | 18104 | 4.14 |
| 1977 | 30926 | 0.67 |
| 1978 | 16905 | 5.88 |
| 1979 | 16264 | 13.89 |
| 1980 | 13251 | 14.04 |
| 1981 | 16400 | 19.00 |
| 1982 | 14987 | 6.67 |
| 1983 | 13923 | 10.56 |
| 1984 | 15107 | 23.87 |
| 1985 | 16836 | 29.41 |
| 1986 | 17291 | 29.71 |
| 1987 | 15931 | 19.92 |
| 1988 | 15428 | 6.52 |
| 1989 | 12097 | (13.37) + |
| 1990 | 10801 | 16.16 * |
| 1991 | 15481 | 42.64 |
| 1992 | 18341 | 7.97 |
| 1993 | 18179 | 23.42 * |
| 1994 / 95 | 20785 | (49.43) ± |
| 1995 / 96 | 18231 | 5.81 |
| 1996 / 97 | 16902 | 8.59 |
| 1997 / 98 | 13921 | 7.14 |

+ *Loss. No produchon due to power cut*

* *Mills Shut due to turbulent condition now that prevailed in the eastern province*

± *Compensation paid to Employees for Voluntary Retinement*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 1986 முதல் 1995 வரை ஆலையில் கடமையாற்றிய ஊழியர்கள்

| Years | Executives | Technical and allied grades | Clerical and all ied | Manual and manipulative | Total |
|---|---|---|---|---|---|
| 1986 | 88 | 139 | 179 | 1184 | 1590 |
| 1987 | 88 | 156 | 181 | 1242 | 1667 |
| 1988 | 88 | 157 | 183 | 1216 | 1644 |
| 1989 | 86 | 151 | 179 | 1223 | 1639 |
| 1990 | 82 | 144 | 178 | 1221 | 1625 |
| 1991 | 76 | 140 | 173 | 1216 | 1605 |
| 1992 | 69 | 123 | 166 | 1168 | 1526 |
| 1993 | 66 | 113 | 145 | 1083 | 1106 |
| 1994 | 66 | 109 | 137 | 1063 | 1375 |
| 1995 | 59 | 113 | 136 | 1047 | 1355 |

**தொழிற்சங்கங்கள் :**

தொழிலாளர்கள் தாங்கள் விரும்பிய தொழிற்சங்கத்தில் சேர சுதந்திரம் இருந்தது.

31.03.1995 இல் உள்ள தொழிற்சங்க உறுப்பினர்கள் பின்வருமாறு:

| **தொழிற்சங்கங்கள்** | **அங்கத்தவர்கள்** |
|---|---|
| சிறிலங்கா சுதந்திரதொழிலாளர் சங்கம் | 175 |
| ஜாதிக சேவய சங்கமய | 249 |
| கடதாசி ஆலை உத்தியோகத்தர்கள் சங்கம் | 66 |
| அரச கூட்டுத்தாபன ஊழியர்சங்கம் | 29 |
| இலங்கை வர்த்தக ஊழியர் சங்கம் | 02 |
| இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் | 16 |
| ஐக்கிய கூட்டுத்தாபன வர்த்தக ஊழியர் சங்கம் | 03 |
| **மொத்த ஊழியர்கள்** | **540** |

**கடதாசி ஆலையின் சரித்திரக் குறிப்புகள்**

1940ம் ஆண்டின் உலக மகா யுத்தத்திற்குப் பின்னர் இலங்கை அரசின் கைத்தொழிற் திணைக்களம் கழிவுக் கடதாசியை மூலப்பொருளாகப் பாவித்து காகித அட்டைகளை உற்பத்தி செய்வதற்காக ஒரு தொழிற்சாலையை காக்காப்பள்ளிய என்ற இடத்திலே நிறுவியது இந்த ஆலை நிறுவி 12 வருடங்களின் பின்னர் முதலாவது ஒருங்கிணைக்கப்பட்ட கடதாசிக் கூழ் மற்றும் கடதாசி உற்பத்தி செய்யும் ஆலை "INTEGRATED PULP AND PAPER MILL" வாழைச்சேனையில் நிறுவப்பட்டது. இந்த ஆலையானது 1955ம் ஆண்டின் 19ம் இலக்கச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு வர்த்தக நடவடிக்கைகளுக்காக 1956ம் ஆண்டு இயங்கத் தொடங்கியது. இந்த ஆலை மீண்டும் சட்டரீதியாகப் பெயர் மாற்றப்பட்டு 1957ம் ஆண்டளவில் 49ம் இலக்கச் சட்டப்படி கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம் என மீள் அமைக்கப்பட்டது. 1967ம் ஆண்டு இரண்டாவது கடதாசி இயந்திரம் பொருத்த ஆரம்பிக்கப்பட்டு 1971ம் ஆண்டு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு அட்டை ஆலை 1972ம் ஆண்டு இயங்க ஆரம்பித்தது. 1976ம் ஆண்டு கலாச்சார தரம் கொண்ட அச்சு மற்றும் எழுத்து கடதாசிகளை உற்பத்தி செய்யும் ஆலை எம்பிலிப்பிட்டியாவில் 01.01.1976ல் இயங்க ஆரம்பித்ததன் பின் இந்தக் கூட்டுத்தாபனம் தேசிய கடதாசி கூட்டுத்தாபனம் என பெயர் சூட்டப்பட்டது. அரசாங்கத்தின் கொள்கையானது எப்படியாவது இந்த ஆலையை விற்பனை செய்து பணம் சம்பாதிக்க வேண்டும் என்பதே. 1992இல் அந்த கொள்கையின் அடிப்படையில் இந்த நிறுவனம் "வரையறுக்கப்பட்ட தேசிய கடதாசி கொம்பனி"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனப் பெயர் மாற்றம் செய்து இதை விற்பனை செய்வதற்கு முயன்று கொண்டிருக்கின்றது ஆனால் துரதிஸ்டவசமாக எவரும் இதைப் பொறுப்பேற்க முன்வரவில்லை.

**வாழைச்சேனை கடதாசி ஆலை சாதித்த சாதனைகள்:**

1. 1974ம் ஆண்டிலிருந்து 1998ம் ஆண்டு வரை கோடிக்கணக்கான ரூபாய்களை இலாபமாக ஈட்டி அரசாங்கத்தின் உண்டியலை நிரப்பியுள்ளது.

2. கடதாசி ஆலை நிறுவும்போது பெற்ற கடனான *KWF Loan* என்ற கடனை முற்று முழுதாக திருப்பிச் செலுத்திவிட்டது.

3. கொழும்பிலே இயங்குவதற்கு தனக்கு ஒரு தலைமைக் காரியாலயம் வேண்டும் என்பதற்காக கொழும்பு யூனியன் பிளேசிலே மூன்று மாடிக்கட்டிடம் ஒன்றைத் தனது சொந்த நிதியிலே வாங்கி அதன் சொந்தக்காரராக இருந்தது.

4. இலங்கையிலுள்ள ஏனைய கைத்தொழில் நிறுவனங்களுடன் போட்டியிட்டு 1993/94 மற்றும் 1994/95ம் ஆண்டுகளிற்கான அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட தேசிய உற்பத்தித்திறன் பரிசு *(National Productivity Award)* பெற்றுக்கொண்டது.

5. ஆயிரக்கணக்கான இளைஞர் யுவதிகளுக்கு தொழில்வாய்ப்பு வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தியது.

6. இளைஞர்களுக்கு வெளிநாடுகளில் *Paper Technology* இல் பயிற்சி அளித்து அவர்களது தொழில் தகைமையை *(Professional Competency)* மேம்படுத்தியமை.

7. கடதாசி இறக்குமதியை நிறுத்தி எங்களது தேவையை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்ததன் மூலம் கோடிக்கணக்கான அன்னியச் செலவணியைச் சேமித்தது *(Conserving Foreign Exchange)*

8. வாழைச்சேனை காவத்த முனையிலே ஒரு மணிக்கூட்டு கோபுரத்தை அமைத்துக் கொடுத்ததன் மூலம் முஸ்லிம், தமிழ் இன உறவினைக் கட்டியெழுப்பியமை.

9. வந்தாறுமூலைப் பல்கலைக்ழகம் நிறுவப்படும் போதும் அதன் பிற்பாடும் பல்கலைக்கழக பேராசிரியர்களுக்கு வேண்டிய தங்குமிட வசதிகள் மற்றும் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தமை.

10. வாழைச்சேனை மக்களின் வருமானத்தையும் அவர்களின் வாழ்வாதாரத்தையும் மேம்படுத்தியமை.

11. வன ஜீவராசிகளின் சரணாலயமாக விளங்கிய வனப்பிரதேசத்தை காகித நகராக அபிவிருத்தி செய்ததில் பெரும் பங்கு வகித்தமை.

12. தொழிலாளர்களினதும் பொது மக்களினதும் போக்குவரத்து வசதிகளைக் கருத்திற்கொண்டு தனது செலவிலேயே காகித நகர் என்ற புகையிரத நிலையத்தை அமைத்துக் கொடுத்தமை.

13. இலங்கையின் இரண்டாவது கடதாசி ஆலையை எம்பிலிப்பிட்டியாவில் நிறுவும்போது அந்த ஆலையின் நிர்மாணத்திற்காக போதிய நிதிப் பங்களிப்பு செய்தமை.

14. வாழைச்சேனையிலே மக்கள் வங்கி அமைப்பதற்கு முதற் காரணியாக இருந்தது. இந்த ஆலையே.

15. தொழிலாளர்களுக்கு வீட்டுக்கடன் கொடுத்ததன் மூலம் வாழைச்சேனையிலே கணிசமான வீடுகள் கட்டப்பட்டு அவர்களது வசதி வாய்ப்பைக் கூட்டிக்கொள்ள உதவியது.

16. தொழிலாளர்களுக்கு வீட்டுக்கடன் கொடுப்பதற்கு வாழைச்சேனை வங்கியிடம் நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டபோது இந்த காகித ஆலை முன்வந்து தேவையான நிதியை வங்கிக்கு கடனாகக் கொடுத்து தொழிலாளர்களின் வீட்டுக் கடன்திட்டத்தை தொடர்ந்து நடத்த உதவியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. மட்டக்களப்பு மாவட்டத்திலேயே தீயைக் கட்டுப்படுத்த ஒரு தீயணைப்பு வாகனம் *(Fire Bowser)* இல்லாத வேளையிலே முதன் முதலாக ஒரு தீயணைப்பு வாகனத்தைக் கொள்வனவு செய்து இந்த மாவட்டத்திலே எங்கு தீ அனர்த்தம் ஏற்பட்டாலும் உடனடியாகவே அங்கு சென்று தீயைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் பெற்ற ஸ்தாபனமாக வாழைச்சேனை ஆலை விளங்கியது.

18. ஆலையின் பொது உறவு உத்தியோகத்தரின் தலைமையில் செயற்பட்ட முதல் உதவிப்படை வாழைச்சேனைப் பிரதேசத்தில் என்ன நிகழ்வு நடைபெற்றாலும் அங்கு பிரசன்னமாயிருந்து தங்கள் சேவையை வழங்கியது.

19. 1971ம் ஆண்டு இலங்கையிலே ஜே.வி. பியினர் அரசுக்கு எதிரான புரட்சியில் ஈடுபட்டபோது வாழைச்சேனை காவல் துறையினரின் வேண்டுகோளை ஏற்று பாதுகாப்பு உத்தியோகத்தர் அமரர்.க.தங்கராசா அவர்கள் தலைமையில் காகித ஆலை பாதுகாப்பு ஊழியர்களின் ஆயுதம் தாங்கிய குழுவொன்று வாழைச்சேனை பொலிஸ் நிலையத்துக்கு பாதுகாப்பு வழங்கி உதவியது.

20. மின்சார விநியோகத்தைச் சீர் செய்வதற்கு வாழைச்சேனையிலே ஒரு மின் மாற்றி *(Transformer)* பொருத்த வேண்டி இருந்த சந்தர்ப்பத்திலே அதற்குத் தேவையான நிலத்தையும் கொடுத்து வேண்டிய பாதுகாப்பையும் வழங்கியது கடதாசி ஆலையே.

21. காகித ஆலை பொது மக்களுடனும் பொது ஸ்தாபனங்களுடனும் நெருங்கிய தொடர்பினைப் பேணிவந்துள்ளது. 1983ம் ஆண்டு அமிர்தகளி மாமாங்கேஸ்வரர் ஆலய நிர்வாகத்தினர் தங்களுக்கு ஒரு மூஷிக வாகனம் வாங்கித்தருமாறு அப்பொதய உதவி ஆலை முகாமையாளர் அமரர் திரு.இ.கணபதிப்பிள்ளை ஐயா மூலமாக ஒரு வேண்டுகோளை விடுத்தனர். இதன் பிரகாரம் இந்த இதழ் ஆசிரியரின் தலைமையில் செயல்பட்ட குழுவினர் யாழ்ப்பாணம் நல்லூரிலே எங்கள் முன்னாள் *Accounts Asst.* அமரர். சத்தியமூர்த்தி அவர்கள் மூலம் வாகனம் ஒன்றை வாங்கி மாமாங்கேஸ்வரர் ஆலயத்துக்கு 1983ம் ஆண்டு அன்பளிப்புச் செய்தார்கள்.

22. வாழைச்சேனை என்ற பிரதேசத்திற்கு ஒரு அறிமுகத்தை ஏற்படுத்தியதே இந்த கடதாசி ஆலை சாதித்த ஒரு பெரிய சாதனை என்றே கூறலாம்.

23. கிழக்கு மாகாணத்துக்குச் சுற்றுலா வருபவர்கள் வாழைச்சேனை கடதாசி ஆலையைப் பார்க்காது திரும்பிச் செல்வதில்லை என்ற நிலைப்பாடே சுற்றுலா வருகின்ற மக்கள் கடதாசி ஆலைக்குக் கொடுக்கும் முக்கியத்துவம்.

24. மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் சிறு பிள்ளைகளின் விடுதியை காகித ஆலை பொறுப்பெடுத்து தொடர்ந்து 3 வருடங்கள் பராமரித்துக் கொடுத்தது. (1980, 1981, 1982)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடதாசி ஆலை சந்தித்த சவால்கள்

வாழைச்சேனை ஆலை இயங்கத் தொடங்கிய 1952ம் ஆண்டிலிருந்து இதுவரை இயற்கை அனர்த்தங்கள் மனிதர்களால் உருவாக்கப்பட்ட அனர்த்தங்கள் எனப் பல விதமான அனர்த்தங்களைச் சந்தித்துள்ளது. அவைகளுட் சில பின்வருமாறு:

1. **வெள்ள அனர்த்தம்:-** 1957ம் ஆண்டு கிழக்கு மாகாணத்தைத் தாக்கிய வெள்ளப்பெருக்கு வாகனேரி, உன்னிச்சை போன்ற குளங்களை உடைத்து துவம்சம் பண்ணியதோடு மட்டுமல்லாது வாழைச்சேனை கடதாசி ஆலை மீதும் ஒரு கை வைத்துவிட்டது. நில மட்டத்தில் இருந்த இயந்திர சாதனங்களை சேதப்படுத்தியது மட்டுமல்லாமல் அங்கு வைத்திருந்த இரசாயனப் பொருட்கள், இயந்திரங்களின் உதிரிப் பாகங்கள், ஆகியவற்றையும் சேதப்படுத்திவிட்ட து.

2. **சூறாவளி அனர்த்தம் :-** 1978ஆம் ஆண்டு ஏற்பட்ட சூறாவளி கட்டிடங்களுக்கு கணிசமான சேதத்தை ஏற்படுத்தியது. இதன் காரணமாக சுமார் ஒரு மாத காலம் உற்பத்தி தடைப்பட்டது

3. **தீ அனர்த்தம் :-** 1964ம் ஆண்டு இலங்கையின் மகாதேசாதிபதி மாண்புமிகு வில்லியம் கோபல்லாவ அவர்கள் வாழைச்சேனை கடதாசி ஆலைக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ள இருந்த வேளையிலே ஆலையில் வைக்கோல் சேமித்து வைத்திருந்த பகுதி தீப்பிடித்து எரிந்து சாம்பலாகியது. வைக்கோல் கும்பமாக இருந்த இடத்திலே சாம்பல் மலையாக காட்சியளித்தது. அந்தக் கால கட்டத்திலே தீயணைப்பு வசதிகள் இருந்ததில்லை.

4. **அவிகலன் (Digesters) வெடித்தல் :-** 1989.01.03ம் திகதி ஆண்டு ஆலையில் இருந்த அவிகலன்களில் ஒன்று வெடித்து அதில் திரு.இ.நற்குணசிங்கம் என்ற ஒரு தொழிலாளி மரணமடைந்தார்.

5. 1977, 1978, 1983 - 1990ம் ஆண்டு காலப்பகுதியில் சட்டமும் ஒழுங்கும் சீர் குலைந்து இருந்த வேளையிலே நான்கு தடவைகள் ஆயுத தாரிகள் ஆலையினுள் புகுந்து ஆலைக்குச் சொந்தமான பொருட்கள், வாகனங்கள் ஆகியவற்றைக் கொள்ளையடித்து சென்றுள்ளனர். இந்த இதழ் ஆசிரியரே ஆயுத தாரிகள் கொள்ளையிட வந்த இருதடவைகள் ஆலையில் கடமை உத்தியோகத்தராகப் பணியில் இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

6. 1989 - 90ம் ஆண்டுகளில் வேலை முடிந்து வீடு திரும்பிய தொழிலாளர்கள் 10 பேர் ஓட்டமாவடிப் பாலத்தின் அருகாமையில் வைத்து சீருடை தரித்த ஆயுத தாரிகளால் வெட்டிக்கொலை செய்யப்பட்டார்கள். அவர்களது இறந்த உடல்கள் பழுதடைந்த நிலையிலே அவ்விடத்திலேயே புதைக்கப்பட்டன.

மேற்குறிப்பிட்ட அனர்த்தங்களுக்கு மத்தியிலும் தொழிலாளர்கள் தங்களது உயிரைப் பணயம் வைத்து கடமைக்குச் சென்று *National Productivity Award* என்று சொல்லப்படுகின்ற தேசிய உற்பத்தித்திறன் பரிசை தொடர்ந்து 1994 -95 இரண்டு ஆண்டுகள் பெற்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட வசதி வாய்ப்புகள்

*NATIONAL INSTITUTE OF BUSINESS MANAGEMENT (N.I.B.M) SRILANKA INSTITUTE OF DEVELOPMENT ADMINISTRATION (SLIDA)*

போன்ற கல்வி நிறுவனங்களில் பயின்று தங்கள் அறிவை மேம்படுத்திக் கொள்ளக்கூடிய பயிற்சி அளித்தல்.

பல்கலைக் கழங்களில் பட்டப்படிப்பினைத் தொடர வாய்ப்பளித்தல்

தொழில் சார்தகைமைகள் பெறுவதற்கு வாய்ப்பளித்தல்

தொழில்சார் நிறுவனங்களில் அங்கத்துவம் பெற்றவர்கட்கு அங்கத்துவ சந்தாப் பணம் செலுத்துதல்

உத்தியோகத்தர்களுக்கு விசேடமாக தொழில் நுட்பவியலாளர்களுக்கு வெளிநாடுகளில் தொழிற்பயிற்சி அளித்தல்.

மேற்குறிப்பிட்ட வசதி வாய்ப்புகளைப் பயன்படுத்தி பின்வருவோர் தங்களது தொழில் தகைமைகளை மேம்படுத்திக் கொண்டனர்.

*i)* அமரர்.இ.க.கணபதிப்பிள்ளை அவர்கள் கணக்காளராக இருக்கும் வேளையிலே *(CIMA) Chartered Institute of Management Accountancy final part* சித்தியடைந்து அதற்கு மேலாக *Fellowship F.C.M.A* தகைமையையும் பெற்றுக்கொண்டார். இதன் காரணமாக அவர் உதவி ஆலை முகாமையாளர் (நிதி) என்ற *(Asst. Mills Manager Finance)* என்ற தரத்துக்கு பதவி உயர்த்தப்பட்டார். அதன் பின்னர் ஆலை முகாமையாளர் என்ற நிலைக்கே உயர்த்தப்பட்டார்.

*ii)* திரு.*B.S.*ஜெகதீசன் அவர்கள் இலிகிதராக கணக்குப்பகுதியில் கடமை புரியும் போது இங்குள்ள வசதி வாய்ப்புக்களைப் பயன்படுத்தி *C.I.M.A* என்கின்ற கணக்குப் பரீட்சையில் சித்திபெற்று *Accountant Mills* என்கின்ற ஆலையில் பிரதம கணக்காளராகப் பதவி உயர்வு பெற்றார். அத்துடன் உள்ளக கணக்குப் பரிசோதகராகவும் பதவி உயர்த்தப்பட்டார்.

*iii)* திரு. சின்னையா என்பவர் கணக்குப் பகுதியிலே இலிகிதராகக் கடமை புரிகின்ற வேளையிலே பேராதனை பல்கலைக்கழகத்திலே வெளிவாரி மாணவராகப் பதிவு செய்து *B.A.Hons* பட்டத்தைப் பெற்றுக்கொண்டார்.

*iv)* வந்தாறுமூலையைச் சேர்ந்த திரு. கந்தசாமி என்பவர் விநியோகப் பகுதியில் சேவையாற்றும் போது பட்டதாரியாகி அரசாங்க சேவையிலே உயர் பதவி பெற்றார்.

*v)* இதே பகுதியில் முகாமைத்துவ உதவியாளராக பணிபுரிந்த திரு அன்பழகன் குருஸ் என்பவர் *B.A.Hons L.L.B* ஆகிய பட்டங்களைப் பெற்று தற்போது உள்ளூராட்சி ஆணையாளரின் அலுவலகத்திலே உயர் அதிகாரியாக பணிபுரிகின்றார். இந்த இதழ் ஆசிரியர் க. சதாசிவம் அவர்களும் இந்த ஆலையிலேயே பணிபுரிந்த வேளையில் கொழும்பு திறந்த பல்கலைக்கழகம் *S.L.I.D.A, Sri Lanka Institute of Development Administration, Chartered Institute of Management. England* ஆகிய கல்விக்கூடங்களில் கல்வி பயின்று பின்வரும் பட்டங்களையும் பெற்று தனது தராதரத்தை மேம்படுத்திக்கொண்டார். *1) Diploma in Management 2) Bachelors Honors degree in Management Studies ( B.M.S Hons) M.C.I.M, England and M.C.I.P. S London.*

செல்வி *Ranji Joseph* அவர்கள் வினியோகப் பகுதியில் தட்டச்சாளராக சேவை புரிகின்ற காலத்திலே பேராதனைப் பல்கலைக்கழகத்தில் வெளி வாரி மாணவியாக பட்டப்படிப்பினை முடித்து பின்னர் அரசாங்க கல்வித் திணைக்களத்தில் ஆசிரியையாக சேர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னமும் தனது சேவையினை தொடர்கிறார். ஆலை ஊழியர்களின் அயராத உழைப்பும் அர்ப்பணிப்புமே கடதாசி ஆலையின் வளர்ச்சிக்கு காரணமாக அமைந்தது என்பதனை யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. இதனைக் கருத்தில் கொண்ட ஆலை நிர்வாகமும் கீழ் குறிப்பிட்ட பல தரப்பட்ட நல்ல பயனுள்ள திட்டங்களை ஊழியர்களுக்கு வழங்கி இருந்தது. என்பதும் மறுக்க முடியாத உண்மையாகும்.

1. குடி மனை வசதிகள்:
   ஏறத்தாழ 90 குடிமனைகள் ஊழியர்களுக்காக அமைக்கப்பட்டன.
2. பொழுதுபோக்குக் கழகம் விளையாட்டுத் திடலுடன் கூடியது.
3. ஊழியர்களின் குழந்தைகளுக்கான பாலர் பாடசாலை
4. குடிமனைப் பகுதியில் பல சரக்கு வியாபார நிலையம்
5. சிற்றுண்டிச்சாலை
6. ஊழியர்களுக்கு ஆலை வாகனங்களை வாடகைக்கு விடல்.
7. நூலகம்

மேற்கூறிய வசதி வாய்ப்புகளுடன் ஊழியர்களை ஊக்குவிக்குமுகமாக பின்வரும் நேரடியான பணக் கொடுப்பனவுத்திட்டங்களும் காகித ஆலையில் நடைமுறையில் இருந்தன.

1. ஒவ்வொரு வருடமும் மிகையூதியம் *(Bonus)*
2. பாவிக்கப்படாத விடுமுறைக்கான கொடுப்பனவு.
3. உற்பத்தி ஊக்குவிப்புக் கொடுப்பனவு
4. கஷ்ரப்படி *(Hardship Allowance)*
5. முறைமாற்று வேலைக்கான கொடுப்பனவு *(Shift Allowance)*
6. வைத்திய செலவுக்கான மீளளிப்புக் கொடுப்பனவு
7. இளைப்பாற்று மரண நன்கொடை திட்டம் *(Death and Retirement benefit scheme)*
8. *Issue of free Milk Tea*
9. *Issue of free Ex-Books*
10. *Issue of subsidized cloth annually*
11. *Payment of six months distress loan*
12. *Payment of bicycle loan*
13. *Payment of Housing loan*

## வாழைச்சேனை ஆலை ஊருக்கும் உலகிற்கும் வழங்கிய சேவைகள்.

வாழைச்சேனை காகித தொழிற்சாலையானது நாட்டின் பலவித தேவைகளைப் பூர்த்தி செய்தது மட்டுமல்லாமல் பாரிய தேசிய வருமானத்தையும் நாட்டிற்கு ஈட்டிக் கொடுத்துள்ளது. யாவரும் அறிந்த உண்மை. இதற்கு அப்பால் இத்தொழிற்சாலையானது இப்பிரதேசங்களுக்கு மட்டுமல்ல ஏனையவர்களுக்கும் பலவிதமான நேரடியான தேவைகளையும் மறைமுகமான சேவைகளையும் வழங்கி இருக்கின்றது. அவற்றைப் பின்வருமாறு பட்டியலிடலாம்.

1. இப்பிரதேச இளைஞர்களுக்கு மட்டுமல்ல பொத்துவில் தொடக்கம் பொலநறுவை வரையான இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் மற்றும் யாழ்ப்பாணம் கொழும்பு போன்ற பல பிரதேச இளைஞர், யுவதிகளுக்கும் வேலை வாய்ப்புகளை வழங்கியதன் காரணமாக இந்த ஆலையானது பிரதேசத்தில் உள்ள சகல மக்களாலும் ஒரு சிறந்த வரவேற்பை பெற்றிருந்தது.
2. இப்பிரதேசத்து மக்கள் தங்கள் வயல்களில் கிடைத்த வைக்கோலை சொந்த வண்டிகள் மூலம் வைக்கோல் சேகரிப்பு நிலையங்களுக்கும் நேரடியாக காகித தொழிற்சாலைக்கும் வழங்கியதன் மூலம் வருவாயைப் பெற்று தமது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திக் கொண்டார்கள்.
3. காகிதத் தொழிற்சாலைக்குரிய சிறு சிறு உதிரிப்பாகங்கள் பிரதேசத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்டதால் பிரதேச வாழ் மக்களின் வருமானம் அதிகரித்திருந்தது.

4. ஆலைக்குடிமனை ஊழியர்கள் மற்றும் ஆலை ஊழியர்கள் தங்களது நாளாந்த தேவைகளை இப் பிரதேசத்தில் இருந்தே கொள்வனவு செய்ததன் மூலம் பிரதேச மக்களின் வருவாய் அதிகரித்தது.

5. காகிதத் தொழிற்சாலையை அண்டிய பகுதிகளில் புதிதாக வர்த்தக நிலையங்கள், உணவகங்கள் திறக்கப்பட்டு வியாபார நடவடிக்கைகள் மேம்பட்டன. இதன் மூலம் பிரதேசத்து மக்கள் பல பலாபலன்களை அனுபவித்தனர்.

6. காகித தொழிற்சாலை ஊழியர்களுக்கு வீடுகளை வாடகைக்கு கொடுத்ததன் மூலம் சாப்பாட்டு வசதிகளை செய்து கொடுத்ததன் மூலம் இப்பிரதேச மக்கள் வருவாயைப் பெற்று தமது வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தினர்.

7. காகிதத் தொழிற்சாலையின் நிமித்தம் அதனை அண்டிய பகுதிகளில் போக்குவரத்து வசதிகள் மேம்பட்டதன் பயனாக பாதை அபிவிருத்திகள் செய்யப்பட்டதனால் அதன் பயன்களை அப்பிரதேசவாசிகளே பெற்றனர்.

8. ஆலையில் மூவின மக்களும் ஒருமித்து சேவை ஆற்றியதன் காரணத்தால் இனங்களுக்கு இடையேயான ஒற்றுமை, புரிந்துணர்வு, கலாச்சாரம் என்பவை மேலோங்கி காணப்பட்டன.

9. ஆலையில் வேலை செய்த குறிப்பாக யாழ்ப்பாணத்து படித்த இளைஞர்கள் இப் பிரதேச மாணவர்களுக்கு பிரத்தியேக வகுப்புகள் நடாத்தி இருந்ததன் காரணமாக இப் பிரதேச மாணவர்கள் சாதாரண, உயர்தர பரீட்சையில் உயர்ந்த பெறுபேற்றினைப் பெற்றுக் கொண்டனர். இதற்கு நல்ல உதாரணம் வாழைச்சேனை ஆலையில் A.Q.C.C ஆகப் பணிபுரிந்த காலஞ்சென்ற S.செல்வராசா மாஸ்டர்.

10. வாழைச் சேனை காகித ஆலை உத்தியோகத்தர்கள் இப்பிரதேச மக்களுக்கு ஒரு முன்மாதிரியாக செயல்பட்டதன் காரணத்தால் இங்கு நாகரிக வளர்ச்சியும் இப்பிரதேசத்தில் ஏற்பட்டது.

11. காகித தொழிற்சாலை ஊழியர்கள் மத்தியில் செயற்பட்டு வந்த இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ, பௌத்த சங்கங்கள் மூலம் இப்பிரதேச ஏழை மாணவர்களுக்கு பல தரப்பட்ட நன்மைகள் கிடைக்கப் பெற்றன. குறிப்பாக இலவச அப்பியாசப் கொப்பிகள் சீருடைகள் வழங்கப்பட்டன.

12. முன்னாள் ஆலை முகாமையாளர் திரு. J.நிமலன், F.நேரு மோசஸ், காலம் சென்ற V.அமலநாதன் ஆகியயோரால் மட்டக்களப்பு மாவட்ட போதனா வைத்தியசாலையிலே இரத்த தான முகாம்கள் ஒழுங்கு செய்யப்பட்டு பல உயிர்கள் காப்பாற்றப்பட்டன. இந்தச் சேவை பொதுமக்களின் பாராட்டைப் பெற்றது.

13. வாழைச்சேனை ஆலையிலேயே உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்ட அப்பியாச கொப்பிகளிலே வாழைச்சேனை என்ற பெயர் பொறிக்கப்பட்டிருந்ததன் காரணமாக வாழைச் சேனை ஊருக்கு ஒரு முகவரியே உருவானது.

# இலங்கையிலே கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனத்திற்குத் தலைமைத்துவம் வழங்கிய பெருந்தகைகள்.

*MR.R.L. BROHIER - CHAIRMAN 1952-1953*
*MR.N. ARUMUGAM - CHAIRMAN 1953 - 1954*
*MR.N. SOMASUNDARAM - 1954 - 1955*
*MR. K.C. THANGARAJAH - CHAIRMAN 1955 - 1977*
*MR.Y.G.EDWARD - CHAIRMAN 1977 - 1989*
*MR.A.B. PADMAPERUMA - CHAIRMAN 1990 -1992*
*MR. MOHAN ABEYNAIKE - CHAIRM AN 1993-1994*
*MR.PALITHA GANEGODA - CHAIRMAN 2002 -2004*
*MR.MANGALA SENARATH -*
*COMPETENT AUTHORITY 2012-2015*

# பொது முகாமையாளர்கள்

*MR.R.P. SINGAM EXECUTIVE OFFICER / GENERAL MANAGER*
*MR.T.B. NARANPANAWA GENERAL MANAGER*
*MR. T. JE YA SINGHAM GENERAL MANAGER*
*MR. N. ABEYANANDAN GENERAL MANAGER*
*MR. H.M. JEYASINGHE GENERAL MANAGER 1976 - 1979*
*MR. M.A. JUSTIN GENERAL MANAGER*
*MR.ABEYARETNE GENERAL MANAGER*
*MR. E. L. W. HAPPUGODA CONSULTANT*
*MR. ABYASINGHE. G.M*

# வாழைச்சேனை கடதாசி ஆலையில் உயர் பதவி வகித்தவர்கள்

| இல | பெயர் | பதவி | சேவைக்காலம் |
|---|---|---|---|
| 1 | Mr.R. சோமசுந்தரம் | தவிசாளர் | 1952- |
| 2 | Mr. J.N.ஆறுமுகம் | -do- | 1953- |
| 3 | Mr.R.L.புறோகியர் | -do- | 1954 - 1955 |
| 4 | Mr. K.C. தங்கராஜா | -do- | 1957 - 1977 |
| 5 | Mr.Y.G .எட்வட் | -do- | 1978 - 1989 |
| 6 | Mr. B. பத்மபெருமா | -do- | 1989 - 1992 |
| 7 | Mr.W.H.S.விஜயரெட்ண | -do- | 1992 - 1993 |
| 8 | Mr. மொகான் அபேநாயக்க | -do- | 1993 - 1994 |
| 9 | Mr. பாலித கணேகொட | -do- | 2002. - 2004 |
| 10 | Mr. அப்துல் நஜீம் | -do- | - |
| 11 | Mr. சுமித் லால் மெண்டிஸ் | do- | - |
| 12 | Mr.S. அமரசிங்க | -do- | 2008- |
| 13 | Mr. அசோகா சுபசிங்க | பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் | |
| 14 | Mr. மங்கள செனரத் | தகுதி வாய்ந்த அதிகாரி | 2012 - 2014 |
| 15 | Mr. சுனில் கந்தேகெதர | -do- | 2015- |
| 16 | Mr.S.M.B. நியாங்கொட | -do- | 2015 - 2016 |
| 17 | Mr. T.B. நாரம்பெனாவ | பொதுமுகாமையாளர் | |
| 18 | Mr. விமால் பத்மபெருமா | -do- | |
| 19 | Mr. H.M. ஜயசிங்க | -do- | 1976 - 1979 |
| 20 | Mr.M.A ஜஸ்டின் | -do- | 1979 - |
| 21 | Mr.J.A. அபேரட்ண | do- | |
| 22 | Mr. V. அபேசிங்க | -do- | |
| 23 | Mr .S. றேலின் கிப்ஸ் | -do- | |
| 24 | Mr. ரஞ்சித் பத்திரண | do- | |
| 25 | Mr. அனுரா ரணவீர | -do- | 2015 - 2016 |
| 26 | Mr.T ஜயசிங்கம் | ஆலை முகாமையார் | 1961 - 1967 |
| 27 | Mr. N. அபேயானந்தன் | do- | 1967 - 1976 |
| 28 | Mr.H.M . ஜயசிங்க | -do- | 1976 - 1979 |
| 29 | Mr.E.L.W. ஹப்புகொட | -do- | 1979 - 1986 |
| 30 | Mr. E. கணபதிபிள்ளை | do- | 1986 - 1996 |
| 31 | Mr.T. சிறிகாந்தன் | -do- | 1996 - 2000 |
| 32 | Mr. R. கிஸ்ணமூர்த்தி | ஆலை முகாமையாளர் | 2002 - 2005 |

| | | | |
|---|---|---|---|
| 33 | Mr. S. செல்வராஜா | -do- | 2005 - |
| 34 | Mr.V. பரமகுருநாதன் | -do- | 2006 - 2008 |
| 35 | Mr. T. வாமதேவன் | -do- | 2008 - 2012 |
| 36 | Mr. J. நிமலன் | do | 2012 - 2014 |
| 37 | Mr. R.P. சிங்கம் | தொழில் முகாமையாளர் | 1950 - 1957 |
| 38 | Mr.T. மார்கம் | -do- | 1958 - 1959 |
| 39 | Mr. ஒட்டோஜேக்கர் | -do- | 1959 - 1960 |
| 40 | Mr. கிங்கின் | உற்பத்தி முகாமையாளர் | 1960 - 1970 |
| 41 | Mr. T. ஜெயசிங்கம் | தொழில் முகாமையாளர் | 1961 - 1967 |
| 42 | Mr.N. அபேயானந்தன் | ஆலை முகாமையாளர் | 1967 - 1976 |
| 43 | Mr.S. நவரெட்ணவேல் | உதவி ஆலை முகாமையாளர் | - |
| 44 | Mr. C. சர்வானந்தன் | do- | - |
| 45 | Mr. T. யோகேஸ்வரன் | -do- | - |
| 46 | Mr.S.V. சிவகணேசமூர்த்தி | -do- | 1984 - |
| 47 | Mr. R. சரத்சந்திரா | -do- | 1994 - |
| 48 | Mr.G.L. ஜோன்சன் | -do- | 2002 - |
| 49 | Mr. K. பத்மநாபபிள்ளை | -do- | 1978 - |
| 50 | Mr.K. சதாசிவம் | உதவி ஆலை முகாமையாளர் | 1993 - 2002 |
| 51 | Mr.H.M. ராஜேந்திரம் | உதவி ஆலை முகாமையாளர் | 1991 - |
| 52 | Mr.R.R. சௌந்தரலிங்கம் | உதவி ஆலை முகாமையாளர் | 1980 - |
| 53 | Mr.R.A. லோறன்ஸ் | உதவி ஆலை முகாமையாளர் | 1989 - |
| 54 | Mr.T. ரவிந்திரநாத் | -do- | 1985 - |
| 55 | Mr.C.B. செலர் | -do- | 1994 - |
| 56 | Miss. உசா சிவசுப்ரமணியம் | -do- | 1990 - |
| 57 | Mr.B.S. ஜெகதீசன் | பிரதம கணக்காளர் | 1985 - |
| 58 | Mr.S. தணிகாசலம் | உதவி ஆலை முகாமையாளர் | 2002 - |
| 59 | Mr.E. சாம்பசிவம் | ஆலைக் கணக்காளர் | 1955 - 1970 |
| 60 | Mr.ஐயங்கர் | ஆலைக் கணக்காளர் | 1955 - 1960 |
| 61 | Mr.V. சோமசுந்தரம் | ஆலைக் கணக்காளர் | 1965 - 1970 |
| 62 | Mr.V. தியாகராஜா | ஆலைக் கணக்காளர் | 1965 - 1970 |
| 63 | Mr.S. மாணிக்கவாசகர் | ஆலை கணக்காளர் | 1964 - 1970 |
| 64 | Mr.S. தனபாலசிங்கம் | ஆலைக் கணக்காளர் | 1965 - 1970 |
| 65 | Mr.B.E. பிரிஸ் | கணக்காளர் | 1965 - 1968 |
| 66 | Mr.S.K. சுப்பிரமணியம் | கணக்காளர் | 1965 - 1966 |
| 67 | Mr.S. மகேசன் | ஆலைப் பொறியியலாளர் | 1962 - 1975 |
| 68 | Mr.V. சுந்தரலிங்கம் | ஆலைப் பொறியியலாளர் | 1960 - 1980 |



**Mr.T.JEYASINGAM**
**MILLS MANAGER G.M**
**05.01.1961 - 15.07.1967**



**Mr.N.ABEYANANDAN**
**MILLS MANAGER G.M**
**16.07.1967 - 22.12.1976**



**Mr.ELW.HAPUGODA**
**MILLS MANAGER**
**01.09.1979 - 31.03.1985**



**Mr.E.KANAPATHIPILLAI**
**MILLS MANAGER**
**13.01.1986 - 22.04.1996**



**Mr.T.SRIKANTHAN**
**MILLS MANAGER**
**23.04.1996 2002**



**Mr.J.NIMALAN**
**MILLS MANAGER**
**2012 -2014**



**Mr.HM.JEYASINGHE**
**MILLS MANAGER G.M**
**23.10.76 - 31.18.1979**



**Mr.JUSTIN**
**GENERAL MANAGER**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# CHAIRMEN OF PAPER CORPORATION



**Mr.KC.THANGARAJAH**
**CHAIRMAN - EPMC / NPC**
**01.07.1956 - 13.09. 1977**



**Mr.Y.G.EDWARD**
**CHAIRMAN**
**14.09.1977 - 03.04.1989**



**Mr.A.BIMAL PADMAPERUMA**
**CHAIRMAN**
**04.04.1989 - 30.06.1992**



**Mr. MOHAN ABEYNAIKE**
**CHAIRMAN**
**03.07.1993 - 19.05.1994**



**Mr.PALITHA GANEGODA**
**CHAIRMAN**
**2002 - 2004**



**Mr.MANGALA SENARATH**
**CHAIRMAN**
**2012 - 2015**

*பிறப்பவர் எல்லோரும் இறப்பர் ஆனால்*
*சிறப்புயர்வுற்றோர் சிந்தையில் இருப்பர்.*

**வாழைச்சேனை கடதாசி ஆலையிலே பணியாற்றி அதன் முன்னேற்றத்திற்காக தங்களது வியர்வையையும் உதிரத்தையும் சிந்தி தங்களது உயிர்களைத் துறந்த உத்தமர்களது விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.**

## NECROLOGY

*01. Mr.THEODORE POMMARANKE - West Germany*
*Chief Erector and Chief Engineer*
*Period of service - 1952 - 1977*

*02. Mr.R.KINKIN - West Germany*
*Production Manager*
*Period of service - 1955 - 1965*

*03. Mr.BURTON - West Germany*
*Mechanical Engineer*
*Period of service - 1964 - 1970*

*04. Mr.T.JEYASINGHAM - Sri Lanka*
*Works Manager - General Manager*
*Period of service - 1955 - 1978*

*05. Mr.N.ABEYANANDAN Mills Manager G.M*
*Period of service - 1955 - 1985*

*06. Mr.R.R.SOUNDARALINGAM*
*Asst Mills Manager, Supplies and Transport*
*Period of service - 1955 - 1985*

*07. Mr.R.EASWARALINGAM*
*Stores Manager*
*Period of service - 1955 - 1980*

*08. Mr.H.M.RAJENDRAM*
*Asst Mills Manager, Supplies and Transport*
*Period of service - 1985 - 1990*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. *Mr.C.B.SELLAR*
*Asst Mills Manager*
*Period of service - 1980 -1985*

10. *Mr.ROBINDAVID*
*Mechanical Foreman*
*Period of service - 1960-1975*

11. *Mr.MUTHUVEL VINAYAGAMOORTHY*
*Foreman Straw yard*
*Period of service - 1955-1980*

12. *Mr.E.KANAPATHIPILLAI*
*Mills Manager, Accountant*
*Period of service - 1965 - 1996*

13. *Mr.R.YOGANATHAN*
*Ware House Superintendent*
*Period of service - 1955 - 1980*

14. *Mr.VENKADESAPIRABU*
*clerk*
*Period of service - 1965 - 1970*

15. *Mr.KANDIAH THANGARAJAH*
*Security Officer*
*Period of service - 1969 - 1980*

16. *Mr.MICHAEL DIAS*
*Asst Mills Manager*
*ஆலையில் நியமனம் 1955.10.01*
*Period of service - 1955 - 1994*

17. *Mr.N.THIAGARAJAPILLAI*
*Asst Personnel Officer*
*Period of service - 1966 - 1989*

18. *Mr.G.B.ARASANILAI*
*Personnel Assistant*

19. *Mr.S.GUNARETNAM*
*Establishment Officer*
*1960 -1990*

20. *Mr.S.SRIGOVINDASAMY*
*Public Relation Officer*
*1978 - 2009*

21. *Mr.S.MICHAEL*
*வகித்த பதவி - Chief Security Officer*

22. *Mr.S.PANCHADCHARAM*
*Asst Mills Manager*
*1960 - 1999*

23. *Mr.K.KASINADAR*
*வகித்த பதவி - Asst Mills Manager - Production*
*ஆலையில் நியமனம் - 1960.02.15*
*ஓய்வு - 1994.09.15*

24. *Mr.A.SANDRASEGARAM*
*வகித்த பதவி - Technologist*
*ஆலையில் நியமனம் - 1962.12.06*
*ஓய்வு - 1994.07.18*

25. *Mr.HA.SOUNDARARAJAH*
*வகித்த பதவி - Production Manager*
*நியமனம் - 1965.08.28*
*ஓய்வு - 1995.03.28*

26. *Mr.P.SACHCHITHANANDAM*
*வகித்த பதவி - Technologist*
*ஆலையில் நியமனம் - 1969.02.13*
*ஓய்வு - 2005.01.04*

27. *Mr.V.THADCHANAMOORTHY*
*வகித்த பதவி - Production Manager*
*ஆலையில் நியமனம் - 1983.05.16*
*ஓய்வு - 1993.10.24*

28. *Mr.S.V.SIVALOGANATHAN*
*வகித்த பதவி - Asst. Technologist*
*ஆலையில் நியமனம் - 1955.10.01*
*ஓய்வு - 1996.03.17*

29. *Mr.MUTHUSAMY*
*வகித்த பதவி - Asst. Technologist*
*ஆலையில் நியமனம் - 1980.04.15*

30. *Mr.E.PATHMANATHAN*
*வகித்த பதவி - Superintendent*
*ஆலையில் நியமனம் - 1965.08.23*

31. *Mr.T.SUNTHARALINGAM*
*வகித்த பதவி - Technologist*
*ஆலையில் நியமனம் - 1968.11.19*
*ஓய்வு - 1996.01.02*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

32. *Mr.S.SINNATHAMBY*
வகித்த பதவி - *Senior Technologist*
ஆலையில் நியமனம் - *1970.04.06*
ஓய்வு - *1991.03.20*

33. *Mr.V.SIVANANDAM*
வகித்த பதவி - *Production Manager*
ஆலையில் நியமனம் - *1956.10.01*
ஓய்வு - *1994.06.01*

34. *Mr.S.MUTHIAH*
வகித்த பதவி - *Superintendent of Stores*
ஆலையில் நியமனம் - *1955*

35. *Mr.C.PONNAMPALAVANER*
வகித்த பதவி - *Ware House Superintendent*
ஆலையில் நியமனம் - *1955*

36. *Mr.HENDRY CASINADER*
வகித்த பதவி - ........... *Clerk*
ஆலையில் நியமனம் -*1966*
ஓய்வு - *1980*

37. *Mr.A.K.NADARAJAH*
வகித்த பதவி - *Cashier*
ஆலையில் நியமனம் - *1955*
ஓய்வு - *1982*

38. *Mr.J.G.R.CROOS*
வகித்த பதவி - *Admin Assistant*
ஆலையில் நியமனம் - *1965*
ஓய்வு - *1980*

39. *Mr.M.KATHIRKAMATHAMBY*
வகித்த பதவி - *Supplies Officer*
ஆலையில் நியமனம் - *1965*
ஓய்வு - *1985*

40. *Mr.V.R.RETNASINGHAN*
வகித்த பதவி - *Ware House Superintendent*
*1955 - 1975*

41. *Mr.V.GANESHEMOORTHY*
வகித்த பதவி - *Welfare Officer*
ஆலையில் நியமனம் - *1962*
ஓய்வு - *1985*

42. *Mr.T.PEETHAMPARAM*
வகித்த பதவி -*Cashier*
ஆலையில் நியமனம் - *1962*
ஓய்வு - *1980*

43. *Mr.K.PADMANATHAPILLAI*
வகித்த பதவி - *A.M.M (Finance)*
ஆலையில் நியமனம் - *1966*
ஓய்வு -

44. *Mrs. RAJESWARY SANGARAPILLAI*
வகித்த பதவி - *Paper Sorter*
ஆலையில் நியமனம் - *1963 - 1990*
ஓய்வு - *1990*

45. *Mrs. LAWRENCE*
வகித்த பதவி - *Paper Sorter*
ஆலையில் நியமனம் - *1962 - 1972*
ஓய்வு -

46. *Mr.SHANMUGARAJAH*
வகித்த பதவி - *Transport Officer*
ஆலையில் நியமனம் - *1962 - 1985*

**வாழைச்சேனை காகித ஆலையில் சேவை புரிந்து இடை விலகியவர்கள் / இளைப்பாறியவர்கள்**

01. கணபதிப்பிள்ளை இராஜரெத்தினம்
வகித்த பதவி - *Accounts Assistant*
சேவைக்காலம் - *1963 - 1990*

02. *Mr.*சண்முகம் சச்சிதானந்தம்
வகித்த பதவி - *Accounts Assistant*
சேவைக்காலம் - *1963 - 1990*

03. *Mr.V.* பாலகிருஸ்ணமூர்த்தி
வகித்த பதவி - *Clerk*
சேவைக்காலம் - *1975 - 1990*

04. *Mr.I.M.M ISMAIL*
வகித்த பதவி - *Asst. supplies Officer*
சேவைக்காலம் - *1962-1985*

05. *Miss. R.JEEVANANDAM*
வகித்த பதவி - *Accountant*
சேவைக்காலம் - *1970-1990*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. Mr.R.YOGENRAM
வகித்த பதவி - Cashier, Clerk
சேவைக்காலம் - 1965 - 1985

07. NAVAM PACKIYAM
வகித்த பதவி - Typist, Clerk
சேவைக்காலம் - 1965 - 1985

08. Mr.K.RASAMANIKAM
வகித்த பதவி - Ware House Superintendent
சேவைக்காலம் - 1969 - 2010

09. Mr.E.SHIVANANDAM
வகித்த பதவி - Account Assistant
சேவைக்காலம் - 1975 -2010

10. Mr.B.S.JEGATHEESAN
வகித்த பதவி - Mills Accountant
சேவைக்காலம் - 1975 -1990

11. Mr.S.KUNARETNAM
வகித்த பதவி - Clerk
சேவைக்காலம் - 1968 - 1990

12. Mr.A.R.ANPALAKAN CROOS
வகித்த பதவி - Clerk
சேவைக்காலம் - 1980 - 1990

13. MR.S.SIVALINGAM
வகித்த பதவி - Accounts Assistant
சேவைக்காலம் - 1970 - 1990

14. MR.K.SIVALINGAM
வகித்த பதவி - Accountant
சேவைக்காலம் - 1967- 2003

15. MR.S.THIRUGNANATHEEPAN
வகித்த பதவி - Fitter
சேவைக்காலம் - 1970- 2007

16 MISS ROHINI KAMALAPPAH
வகித்த பதவி - Typist
சேவைக்காலம் - 1975 - 2004

18. MISS.ARULMANI VASANTHARASAPILLAI
வகித்த பதவி - Typist
சேவைக்காலம் - 1975 - 2010

19. MRS.VIJAYANTHY PONNIAH
வகித்த பதவி - Typist
சேவைக்காலம் - 1970 - 2000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Necrology (மரணமடைந்தவர்கள்)

| இல | பெயர் | பதவி | வதிவிடம் |
|---|---|---|---|
| 1 | R.L.புறோகியர் | தலைவர் | கொழும்பு |
| 2 | N.ஆறுமுகம் | -do- | do- |
| 3 | K.C.தங்கராஜா | -do- | -do- |
| 4 | A.B.பத்மபெருமா | -do- | do- |
| 5 | Y.G.எட்வட் | -do- | மட்டக்களப்பு |
| 6 | T.E.நாரம்பனாவ | பொதுமுகாமையாளர் | கொழும்பு |
| 7 | H.M.ஜயசிங்க | -do- | -co- |
| 8 | T.E.மார்க்கம் | பொதுமுகாமையளர் | ஜெர்மனி |
| 9 | S.M. இப்றாலெவ்வை | பொது நலன் உத்தியோகத்தர் | சம்மாந்துறை |
| 10 | A.கதிர்காமநாதன் | முகாமை - பயிற்சியாளர் | மட்டக்களப்பு |
| 11 | P.A.றசூல் | பொறியியலாளர் | வாழைச்சேனை |
| 12 | T.D.ராஜேந்திரம் | ஆலைப் பொறியியலாளர் | மட்டக்களப்பு |
| 13 | R.F. செல்வராஜா | பொறியியலாளர் | யாழ்ப்பாணம் |
| 14 | D.டேவிட் | அத்தியட்சகர் (கொதிகலன்) | வாழைச்சேனை |
| 15 | A.தர்மரெட்ணம் | அத்தியட்சகர் | மட்டக்களப்பு |
| 16 | T. மோகனதாஸ் | மின் - அத்தியட்சகர் | யாழ்ப்பாணம் |
| 17 | G.K. சாம்பசிவம் | அத்தியட்சகர் (வாகனம்) | மட் - காரைதீவு |
| 18 | T.காசிலிங்கம் | அத்தியட்சகர் (பண்டகசாலை) | யாழ்ப்பாணம் |
| 19 | S.சத்தியமூர்த்தி | நிறைவேற்று உத்தியோகத்தர் (கணக்குபகுதி) | மட்டக்களப்பு |
| 20 | N.N.லோறன்ஸ் | உதவிஆலை முகாமையாளர் (உற்பத்தி) | திருகோணமலை |
| 21 | M.N.பரமேஸ்வரன் | முகாமையாளர் (உற்பத்தி) | யாழ்ப்பாணம் |
| 22 | A.மகாதேவா | அத்தியட்சகர் (உற்பத்தி) | -do- |
| 23 | K.நடராஜா | அத்தியட்சகர் (வைகோல் பகுதி) | வந்தாறுமூலை |
| 24 | A.நடராஜா | நிர்வாக உதவியாளர் | மட்டக்களப்பு. |
| 25 | T.ஜெபராஜா | வினியோக உத்தியோகத்தர் | ஏறாவூர் |
| 26 | P.சண்முகநாதன் | சிரேஸ்ட அத்தியட்சகர் (விவசாயம்) | கற்குடா |
| 27 | N.ஆறுமுகம் | அத்தியட்சகர் (வைக்கோல் சேகரிப்பு) | வாழைச்சேனை |
| 28 | S.குமரகுரு | அத்தியட்சகர் | கிரான் |
| 29 | M.M. ஜுனைட் | பதவிநிலை உதவியாளர் | சம்மாந்துறை |
| 30 | T.குகேந்திரன் | உதவி கொள்வனவு அலுவலர் | மட்டக்களப்பு, |
| 31 | M. திருஞானமூர்த்தி | உதவி வினியோக அலுவலர் | யாழ்ப்பாணம் |
| 32 | M.I. முகமட் சாதிக் | சந்தைப்படுத்தல் முகாமையாளர் | சம்மாந்துறை |
| 33 | S. செல்வராஜா | A. Q.C.C / M.M | யாழ்ப்பாணம் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 34 | T. சீனித்தம்பி | முகாமை- உதவியாளர் | மட்/அமிர்தகழி |
| 35 | MRS. பிரேமா கமலநாதன் | தட்டச்சாளர் | மட்டக்களம்பு |
| 36 | K. ஜெயகொடி | ஆலை மின் பொறியியலாளர் | - do - |
| 37 | V. அமலநாதன் | முகாமை- உதவியாளர் | மட்/தேற்றாதீவு |
| 38 | MR. ஓட்டோ ஜேக்கர் | ஆலைமுகாமையாளர் | ஜெர்மனி |
| 39 | K. ஆழ்வாப்பிள்ளை | கணக்கு உதவியாளர் | யாழ்ப்பாணம் |
| 40 | C.S.பவான் | அத்தியட்சகர் (உற்பத்தி) | மட்டக்களப்பு |
| 41 | V.சண்முகராஜா | போக்குவரத்து அலுவலர் | மட்/புநார் |
| 42 | K. பத்மநாபபிள்ளை | உதவி ஆலை முகாமையாளர் (நிதி) | யாழ்ப்பாணம் |
| 43 | S. பத்திநாதன் | தொழில் நுட்பவியலாளர் | வாழைச்சேனை |
| 44 | T. வன்னியசிங்கம் | ஆலைப் பொறியியலாளர் | யாழ்ப்பாணம் |
| 45 | R. அருளானந்தம் | -do- | - do - |
| 46 | K. சிவபாதம் | கணக்கு உதவியாளர் | மட்டக்களப்பு |
| 47 | T. பீதாம்பரம் | காசாளர் | ஆரையம்பதி |
| 48 | J.G.R. குருஸ் | நிர்வாக அலுவலர் | மட்டக்களப்பு |
| 49 | C. பொன்னம்பலவாணர் | நிர்வாக உதவியாளர் | யாழ்ப்பாணம் |
| 50 | V. சிவானந்தன் | உற்பத்தி முகாமையாளர் | - do - |
| 51 | S. செல்வராஜா | A.Q.C.C / M.M | யாழ்ப்பாணம் |
| 52 | T.D.இராஜேந்திரா | ஆலைப் பொறியியலாளர் (இயந்திரம்) | மட்டக்களப்பு |
| 53 | V.K. தங்கராஜா | முகாமை- உதவியாளர் | - do - |
| 54 | M. சகாதேவராஜா | இலிகிதர் | மட்டக்களப்பு |
| 55 | T. மயில்வாகனம் | - do - | - do - |
| 56 | N.T. சிவலிங்கம் | பொதுநல உத்தியோகத்தர் | வாழைச்சேனை |
| 57 | T. வாசுதேவா | கணக்கு உதவியாளர் | மட்டக்களப்பு |
| 58 | M. ரஞ்சித் மகேந்திரன் | முகாமை உதவியாளர் | செங்கலடி |
| 59 | M. பரமலிங்கம் | அத்தியட்சகர் | கல்லடி |
| 60 | V.R. இரத்தினசிங்கம் | பண்டகசாலை அத்தியட்சகர் | யாழ்ப்பாணம் |
| 61 | அற்புதநாதன் | அத்தியட்சகர் (இயந்திரம்) | கொழும்பு |
| 62 | ஜெயதினி அபயரெட்ணா | தட்டச்சாளர் | மட்டக்களப்பு |
| 63 | R. யோகநாதன் | பண்டகசாலை அத்தியட்சகர் | யாழ்ப்பாணம் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டுநகர் மண்ணின் மைந்தன் மாணிக்கமும் அவரது முதல் மாணவனும்

இந்து மகா சமுத்திரத்தின் முத்து எனச் சொல்லப்படும் இலங்கை மணித்திரு நாடு எங்கள் நாடு. இந்த நாட்டிலே பாலுந்தேனும் கலந்து ஓடுகின்ற பிரதேசம் மட்டக்களப்பைத் தலைநகராகக் கொண்ட கிழக்கு மாகாணம். இந்த மாகாணத்தில் அமைந்துள்ள கிராமம் அமிர்தகழி. இந்த அமிர்தகழியில் பிறந்தவர்கள்தான் மாணிக்கம் என்று அமிர்தகழி மக்களால் செல்லமாக அழைக்கப்படும் இளையதம்பி தம்பதியினரின் செல்வப்புதல்வன் "கணபதிப்பிள்ளையும் அவரின் முதல் மாணவனாகிய நானும்.

1940ம் ஆண்டுகளிலே அமிர்தகழிக்கும் அதனை அண்மித்த கிராமங்களுக்கும் பொதுவான பாடசாலையாக அமைந்திருந்தது. அமிர்தகழி மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை *(Amirthakaly Methodist Mission Tamil Mixed School)*. இங்கே ஐந்தாம் வகுப்பு வரை வகுப்புக்கள் நடத்தப்பட்டன. 1946ம் ஆண்டு நான் முதலாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். அந்தவேளையிலே மாணிக்கம் என்ற பெயருடைய ஒரு அண்ணா அரைக்காற்சட்டையுடன் வந்து ஐந்தாம் வகுப்பில் படித்ததைக் கண்டிருக்கிறேன். அவரது வகுப்பாசிரியர் நாகமணி வாத்தியார்தான் எங்களுக்கும் வகுப்பாசிரியராகப் பணியாற்றினார். நான் மணலிலே அமர்ந்து அ, ஆ எழுதும்போது அவர் வாங்கில் *(Bench)* அமர்ந்து படிப்பார். சொற்ப காலத்தின் பின்னர் நான் அவரைக் காணவில்லை.

1951ம் ஆண்டு அமிர்தகழி மெதடிஸ்த மிசன் தமிழ் கலவன் பாடசாலையில் முதல் முதலாக ஆறாம் வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. அதிஸ்ட வசமாகவோ துரதிஸ்ட வசமாகவோ முதல் முதலாக ஆரம்பிக்கப்பட்ட ஆறாம் வகுப்பில் நான் மாத்திரம் ஒரு மாணவனாகப் படித்தேன். அந்த வேளையிலே அரைக் கை சேட், வேட்டியுடன் ஒரு ஆசிரியர் எனக்கு ஆங்கிலம் கற்பிக்க வந்திருந்தார். அவர் வேறு யாருமல்ல நான் மணலில் அமர்ந்து முதலாம் வகுப்பு படிக்கும் போது வாங்கில் அமர்ந்து ஐந்தாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்த மாணிக்கம் அண்ணாதான் என்பது உறுதியாயிற்று. அவர் 5ம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து வந்தாறுமூலை மகா வித்தியாலயத்தில் கல்வி கற்று சிரேஸ்ட பாடசாலை தராதரப்பத்திரப் பரீட்சையில் *(Senior School Certificate)* சித்தி பெற்று தராதரப்பத்திரமற்ற ஆசிரியராக நியமனம் பெற்று ஆங்கிலம் படிப்பிப்பதற்காக வந்துள்ளார் என பின்னர்தான் அறிந்தேன். நான் வகுப்பில் தனி மாணவன். இந்தப் பாடசாலையிலே வசதி வாய்ப்புக்கள் குறைவானதால் கணபதிப்பிள்ளை ஐயா அவர்களும் எனது அருகே வாங்கில் அமர்ந்து எனக்குப் பாடம் படிப்பிப்பார்.

சுமார் ஒருவருட காலம் இருக்கும். ஐயா அவர்கள் General Clerical Service Exam (பொது எழுதுவினைஞர் சேவைப் பரீட்சையில் சித்திபெற்று கொழும்பு சென்று விட்டார்.) கொழும்பிலே கணக்காய்வாளர் நாயகத்தின் திணைக்களத்திலே வேலை செய்வதாக கேள்விப்பட்டேன். ஆனால் அவரை நான் காணவில்லை. நான் அமிர்தகழியிலே எட்டாம் வகுப்பு வரை படித்துவிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசடி மெதடிஸ்த மிசன் பாடசாலையிலே சிரேஸ்ட தராதரப்பத்திரப் பரீட்சை (S.S.C) கலைப்பிரிவு, மட்டுநகர் அரசினர் கல்லூரியில் விஞ்ஞானப்பிரிவில் (S.S.C) சித்தி பெற்று பின்னர் 1963 ம் ஆண்டு வாழைச்சேனை கடதாசி ஆலையில் எழுது வினைஞராக சேர்ந்தேன். 1965ம் ஆண்டு ஐக்கிய தேசியக்கட்சி தேர்தலில் வெற்றி பெற்று அரசாங்கம் அமைத்து கொழும்பு குதிரைப்பந்தயத் திடலில் கைத்தொழில் பொருட்காட்சி ஒன்று (Industrial Exhibition) ஒழுங்கு செய்யப்பட்டது. வாழைச்சேனை கடதாசி ஆலையும் இந்த பொருட்காட்சியில் பங்கெடுத்ததன் காரணமாக நானும் கடமையின் நிமித்தம் அங்கு சென்றேன். பொருட்காட்சி முடிந்ததும் காட்சிப்படுத்தப்பட்ட பொருட்களை எல்லாம் கொழும்பிலுள்ள தலைமைக் காரியாலயத்தில் ஒப்படைக்க வேண்டிய பொறுப்பு எனக்கு இருந்தது. இதன் காரணமாக கொழும்புக் கோட்டையிலுள்ள York Street இல் அமைந்துள்ள எங்களது தலைமைக் காரியாலயத்துக்குச் சென்ற போதுதான் கணபதிப்பிள்ளை ஐயா அவர்களைச் சந்தித்தேன். அந்த வேளையில்தான் அவர் சொன்னார் தான் கணக்காய்வாளர் திணைக்களத்தில் சேவை செய்யும்போது முன்னாளில் Cost and Works என்ற பெயருடன் ஆரம்பிக்கப்பட்ட C.I.M.A படித்ததாகவும் அதன் Intermediate இடைக்காலப் பரீட்சையில் சித்திபெற்று கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனத்தில் 1965 ம் ஆண்டு தை மாதம் சேர்ந்ததாகவும் தனது முக்கிய நோக்கம் தனது சொந்த ஊரான மட்டக்களப்பிலே வேலை செய்ய வேண்டும் என்பதுதான் என்று தனது ஆதங்கத்தை என்னிடம் வெளியிட்டார்.

வாழைச்சேனை ஆலையிலிருந்து தன்னைச் சந்தித்த முதல் மனிதன் நான்தான் எனவும் சொல்லி மிகவும் சந்தோசமடைந்தார். கடதாசிக் கூட்டுத்தாபன முகாமை அவருக்கு அளித்த வாக்குறுதியின் படி வாழைச்சேனை ஆலையிலே உள்ளகக் கணக்குப் பகுதி என்ற ஒரு பகுதியை (Internal Audits Section என்ற பகுதியை) ஏற்படுத்தி கணபதிப்பிள்ளை ஐயா அவர்கள் அந்தப் பகுதியில் தலைவராக நியமிக்கப்பட்டதன் பின்னர் அவரது வாழைச்சேனை காகித ஆலை வாழ்க்கை 1965ம் ஆண்டு பங்குனி மாதத்திலே ஆரம்பித்தது. ஐயா அவர்கள் உள்ளகக் கணக்குப் பரிசோதனை பகுதியை ஆரம்பித்த வேளையில்தான் ஆலையிலே கணக்காளராக இருந்த திரு. தனபாலசிங்கம் அவர்களது மகன் இறந்துவிட்டார். அவரது மரணத்தைத் தொடர்ந்து திரு. தனபாலசிங்கம் அவர்கள் கொழும்புத் தலைமைக் காரியாலயத்துக்கு மாற்றலாகிச் செல்ல ஆலையின் கணக்காளர் பதவி (Accountant Mills) கணபதிப்பிள்ளை ஐயா அவர்களது தலையில் சுமத்தப்பட்டது. உள்ளகக் கணக்காய்வாளர் பதவி திரு. S. மாணிக்கவாசகர் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இவரது ஆற்றலையும், அறிவையும் கண்ணுற்ற கூட்டுத்தாபனத் தலைவர் கே. சி. தங்கராசா அவர்கள் ஆலைக் கணக்குப் பகுதியுடன் நிர்வாகத்தையும் பொறுப்பேற்கும்படி பணித்ததுடன் ஐயா அவர்களது பதவியையும் "உதவி ஆலை முகாமையாளர் நிதியும், நிர்வாகமும்" என உயர்த்தி பொறுப்பையும் ஒப்படைத்தார்.

இந்தக்கால கட்டத்திலே ஆலையில் சரியான நிர்வாகக் கட்டமைப்பு ஒன்று இல்லாததன் காரணத்தால் நிர்வாகப் பகுதிக்கென ஒரு Clerical Procedure மற்றும் விநியோகப் பகுதிக்கென வேறு ஒரு Procedure இயற்று மாறும் இவர் பணிக்கப்பட்டார். இவர் கணக்காய்வாளர் நாயகத்தின் திணைக்களத்தில் பணியாற்றும்போது London Transport Board என்ற ஸ்தாபனத்திலே நடைமுறையிலிருந்த மேற்குறிப்பிட்ட கட்டமைப்புகளை நன்கு வாசித்து அவற்றைத் தனது மனதில் பதித்துக் கொண்டதன் காரணமாக கடதாசி ஆலைக்கு வேண்டிய ஆவணங்களை எல்லாம் மிகவும் ஆக்கபூர்வமான முறையிலே தயாரித்து அவைகளை சிறப்பாக அமுல்படுத்தி உயர் அதிகாரிகளின் பாராட்டைப் பெற்றார். இந்த வேளையிலே இங்கிலாந்து பட்டய முகாமைத்துவ கணக்குப் பகுதியில் இறுதிப் பகுதியையும் Final part of C.I.M.A சித்தி பெற்றிருந்ததன் காரணமாக கடதாசி ஆலைக் கூட்டுத்தாபன தலைவரின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிபாரிசின் பேரில் இவருக்கு *Fellow* என்ற அந்தஸ்தும் கிடைத்தது மட்டக்களப்பு மாவட்டத்திலே C.I.M.A என்ற தொழில் சார் பரீட்சையில் *Fellow* என்ற உயரிய அந்தஸ்தை மட்டக்களப்பில் முதன்முதலாகப் பெற்றவர் திரு. கணபதிப்பிள்ளை ஐயா அவர்கள்தான் என்று சொல்வதில் பெருமையடைகின்றேன். 1983ம் ஆண்டு நடைபெற்ற இனக்கலவரத்தைத் தொடர்ந்து கிழக்கு மாகாணத்திலே சட்டமும் ஒழுங்கும் சீர்கெட்டிருந்தது. 1985 - 1990ம் ஆண்டு காலப்பகுதியில் நிலைமை மிகவும் மோசமாக இருந்தது. காட்டுச் சட்டமே அதாவது *Survival of the Fittest* என்ற நிலைப்பாடே இந்த மாகாணத்தில் இருந்தது. பல தடவைகள் அடையாளங் காணமுடியாத ஆயுததாரிகள் வாழைச்சேனை ஆலையினுள் புகுந்து ஆயுத முனையிலே பொருட்களையும் வாகனங்களையும் கொள்ளை அடித்துச் சென்றனர். இந்த இதழாசிரியர் கடமை உத்தியோகத்தராக இருந்த வேளையிலே இரு தடவைகள் இவ்வாறான சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. இக்கால கட்டத்திலே கணிசமான பொதுமக்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டனர்.

ஒருநாள் ஆலைத் தொழிலாளர்கள் சுமார் 10 பேர் வேலை முடிந்து வீடு திரும்பும் போது ஓட்டமாவடிப் பாலத்துக்கு அருகாமையில் வைத்து வெட்டிக் கொல்லப்பட்டனர். இரண்டு, மூன்று நாட்களின் பின்னர் அவர்களது சடலங்கள் அழுகிய நிலையில் அவ்விடத்திலேயே புதைக்கப்பட்டன. இவர்களுள் N.செகராசசிங்கம் என்னும் தொழில்நுட்ப உத்தியோகத்தரும் விநியோகப் பகுதியைச் சேர்ந்த இராமநாதன் என்பவரும் உள்ளடங்குவர். இந்தக் காலகட்டத்தில்தான் ஆலை முகாமையாளர் என்கின்ற பொறுப்பு வாய்ந்த பதவி கணபதிப்பிள்ளை ஐயா அவர்களின் தலையில் சுமத்தப்பட்டது. இந்தப் பதவியிலே ஒரு துளியேனும் விருப்பமில்லாத அவர் அன்றைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு ஆலையின் நலனுக்காக அந்தப் பதவியிலே செயல்படத் தொடங்கினார். ஏறத்தாழ 120 மில்லியன் ரூபாய் பெறுமதியான ஆலையையும் ஆயிரத்துக்கு மேற்பட்ட தொழிலாளர்களையும் பாதுகாத்து செயற்படுவது இலேசான காரியமல்ல. காட்டுச் சட்டம் நடைமுறையில் இருந்த வேளையிலே ஆலைத் தொழிலாளர்களைப் பொறுத்தமட்டில் அவர்கள் ஆலைக்குள் இருக்கும்போதும் வெளியில் சென்றுவரும்போதும் அவர்களது உயிர் எப்போதும் ஆபத்திலிருந்த காலகட்டம் அது. ஒருநாள் மாலை 4.30 மணி இருக்கும் 4.00 மணிக்கு கடமை முடிந்து தொழிலாளர்கள் வீடு திரும்புவதற்காக காகித நகர் புகையிரத நிலையத்தில் புகையிரதத்திற்காக காத்துக் கொண்டிருந்தனர். நான் இருந்த இடத்திலிருந்து சுமார் 15 மீட்டர்களுக்கு அப்பால் வாசல் படிக்கட்டிலே ஐயா அவர்களும் அமர்ந்திருந்தார். அந்த வேளையிலே அடையாளம் தெரியாத இருவர் துவிச்சக்கரவண்டிகளில் வந்து கண் இமைக்கும் நேரத்தில் ஐயா அவர்களை பலாத்காரமாக ஒருவர் துவிச்சக்கர வண்டியில் ஏற்றினார். அவரது கையிலே கைத்துப்பாக்கி இருந்தது. இரண்டு துவிச்சக்கர வண்டிகளுமே விரைவாக நகர்ந்தது. என்னைக் கடந்து சென்ற வேளையிலே ஐயா அவர்கள் எனது முகத்தைப் பார்த்தார். ஏக்கமும் பயமும் அவரது முகத்திலே காணப்பட்டது. அந்த இடத்திலே சுமார் 150 தொழிலாளர்கள் வரை இருந்திருப்பார்கள் அவர்களால் வாய் கூடத் திறக்க முடியவில்லை காரணம் மரண பயம் அடுத்த நாள் நாங்கள் கடமைக்கு வந்தோம். ஆனால் நாங்கள் எந்த வேலையும் செய்யக்கூடிய நிலையில் இருக்கவில்லை. ஆலையின் நிர்வாகக் கட்டிடத்துக்கு முன்பாக அமர்ந்திருந்து நாங்கள் வணங்கும் தெய்வத்தை நினைத்து சிங்களவர்கள், இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் இந்துக்கள் வெவ்வேறாக அமர்ந்திருந்து பிரார்த்தனை செய்து இறைவனை வேண்டினோம்.

